

காகசஸ் மலைக்கைதி

லியோ டால்ஸ்டாய்

தமிழ் மொழி பெயர்ப்பு: **மீனாக்ஷி பாலகணேஷ்**



ஜீலின் என்ற பெயர் கொண்ட ஒரு ஆபீஸர் காகசஸ் மலை ராணுவத்தில்பணிபுரிந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவன் வீட்டிலிருந்து, அவன் தாயிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவள் பின்வருமாறு எழுதியிருந்தாள்: “எனக்கோ வயதாகிக் கொண்டிருக்கின்றது. இறப்பதற்கு முன்பு என் அருமை மகனைக் கடைசி முறையாகப் பார்க்க ஆசையாக உள்ளது. வந்து எனக்கு விடை கொடுத்து என்னை அடக்கம் செய்து விடு. பின், கடவுளின் விருப்பம் அதுவானால், எனது ஆசிகளுடன் உன் பணிக்குத் திரும்பிச் செல்வாயாக. நான் உனக்காக ஒரு நல்ல, புத்தியுள்ள, கொஞ்சம் சொத்தும் உள்ள பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறேன். உன்னால் அவள் மீது அன்பு செலுத்த முடியுமானால், நீ அவளை மணந்து கொண்டு வீட்டிலேயே தங்கி விடலாம்.”

ஜீலின் இதைப் பற்றி யோசித்தான். அந்த முதியவளின் நாட்கள் எண்ணப் பட்டுள்ளன என்பது உண்மையே. அவளை உயிருடன் காண அவனுக்கு இன்னொரு வாய்ப்புக் கிட்டாது. அதனால் அவன் செல்லத் தான் வேண்டும்; மேலும் அந்தப் பெண் நல்லவளாக இருந்தால், அவளை ஏன் மணந்து கொள்ளக் கூடாது?

ஆகவே அவன் தனது துணைத் தளபதியிடம் சென்று, விடுமுறை பெற்றுக் கொண்டு, தோழர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு, பிரிவுபசாரமாக

படைவீரர்களுக்கு நான்கு வாளிகள் வோட்காவும் கொடுத்து உபசரித்து, வீடு செல்லத் தயாரானான்.

காகசஸ் பகுதியில் போர் நடந்து கொண்டிருந்த சமயம் அது. சாலைகள் இரவில் மட்டுமின்றிப் பகலிலும் கூடப் பாதுகாப்பற்றி-ருந்தன. யாராவது ரஷ்யன் அவனது கோட்டையிலிருந்து சிறிது தூரம் நடந்தாலோ, அல்லது குதிரையில் சவாரி செய்தாலோ, தார்த்தாரியர்கள் அவனைக் கொல்லவோ அல்லது மலை மீது இழுத்துச் சென்று விடவோ செய்தார்கள். அதனால் வாரத்திற்கு இருமுறை ராணுவ வீரர் குழு ஒன்று ஒரு கோட்டையிலிருந்து புறப்பட்டு அடுத்த கோட்டை வரை அணிவகுத்துச் செல்லும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவர்கள் மற்ற பயணிகள் அல்லது வழிப்போக்கர்களைப் பாதுகாப்பாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அழைத்துச் செல்வர்.

அது வேனிற் காலம். பொழுது புலர்ந்ததும் சாமான்களை ஏற்றிச் செல்லும் வண்டி கோட்டையிலிருந்து புறப்படத் தயாராக இருந்தது; ராணுவ வீரர்கள் அணிவகுத்து வெளியே வந்தனர். சாலை வழியே அவர்கள் சாமான் வண்டியுடன் கிளம்பினார்கள். ஜீலின் குதிரை மீது அமர்ந்திருந்தான்; அவனது உடைமைகள் கொண்ட ஒரு தள்ளு வண்டி, சாமான் வண்டியுடன் சென்றது. அவர்கள் பதினாறு மைல்கள் செல்ல வேண்டும். சாமான் வண்டி மெதுவாக நகர்ந்தது; சில சமயம் வீரர்கள் நடப்பதை நிறுத்துவர்; அல்லது, ஏதாவது ஒரு தள்ளு வண்டியிலிருந்து ஒரு சக்கரம் கழன்று வந்து விடும்; அல்லது ஒரு குதிரை நகராமல் சண்டி செய்யும்- அப்போது எல்லாரும் காத்திருக்க வேண்டி வரும்.

சூரியன் உச்சிப் பொழுதை அடைந்த நேரம் அவர்கள் பாதி தூரம் கூடச் சென்றிருக்கவில்லை. புழுதியும் வெப்பமுமாய் இருந்தது, சூரியன் எரித்து கொண்டிருந்தான்; தங்குமிடம் ஒன்று கூட எங்கும் இருக்கவில்லை: சுற்றிலும் வெட்ட வெளி, ஒரு மரமோ, ஒரு புதரோ அச்சாலையில் இருக்கவில்லை.

ஜீலின் முன்னால் சவாரி செய்தான்; பின் நின்று, சாமான் வண்டி தன்னைக் கடந்து போகும்வரை காத்திருந்தான். அப்போது சைகை கொடுக்கும் கொம்பு வாத்தியத்தின் ஊதல் தன் பின்னாலிருந்து ஒலிக்கக் கேட்டான். திரும்பவும் குழு நின்று விட்டிருந்தது. ஆகவே அவன் இவ்வாறு நினைத்தான்: ‘நானே தனியாக சவாரி செய்தால் நல்லதல்லவா? என் குதிரை மிக நல்ல குதிரை; தார்த்தாரியர்கள் என்னைத் தாக்கினால், என்னால் குதிரையில் பாய்ந்தோடி விட முடியும். இருந்தாலும், காத்து நிற்பதே புத்திசாலித்தனம்.’

இவ்வாறு அவன் யோசனை செய்து கொண்டிருந்த பொழுது, கஸ்டீலின் என்ற ஒரு ஆபீஸர்- அவனிடம் துப்பாக்கி இருந்தது- ஜீலின் பக்கம் சவாரி செய்து வந்து சொன்னான்:

“வா ஜீலின், நாம் தனியாகச் செல்லலாம்.இது படு மோசமாக இருக்கிறது; நான் பசியால் வருந்துகிறேன், இந்தச் சூடும் பொறுக்க முடியவில்லை. எனது சட்டை பிழியும்படி ஈரமாகி விட்டது.”

கஸ்டீலின் ஒரு பருத்த, கனத்த சரீரமுடைய ஆள்; வியர்வை அவனது சிவந்த முகத்தில் வழிந்தோடியது. ஜீலின் கொஞ்சம் யோசித்தான்; பின்பு கேட்டான், ” உன்னுடைய துப்பாக்கியில் தோட்டாக்கள் உள்ளனவா?”

“ஆம். உள்ளன.”

“நல்லது. அப்பொழுது நாம் போகலாம்.ஆனால், நாம் ஒருவரை ஒருவர் பிரிந்து போகக் கூடாது என்பது கட்டாயம்.”

ஆகவே அவர்கள் அந்தப் பரந்த வெட்ட வெளியில், உரையாடியபடி, ஆனால் இரு பக்கமும் பார்வையைச் செலுத்தியபடியே முன்னால் சவாரி செய்தார்கள். அவர்களால் தங்களைச் சுற்றிலும் பார்க்க முடிந்தது. ஆனால் வெட்ட வெளியைக் கடந்த பிறகு, சாலை இரு குன்றுகளுக்கிடையே இருந்த ஒரு பள்ளத்தாக்கின் வழியாகச் சென்ற போது ஜீலின் கூறினான்: “நாம் அந்தக் குன்றின் மேலேறிச் சுற்றிலும் ஒரு நோட்டம் விடுவது நல்லது; இல்லாவிடில், நமக்குத் தெரியும் முன்பே தார்த்தாரியர்கள் நம் மீது பாய்ந்து விடுவார்கள்.”

அதற்குக் கஸ்டீலின் சொன்னான்: “என்ன பிரயோஜனம்? நாம் போகலாம் வா.”

ஜீலின் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

“இல்லை,” என்றவன், “நீ வேண்டுமானால் இங்கேயே காத்திரு. ஆனால் நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்.’’ குதிரையை இடப்புறம் திருப்பிக் கொண்டு குன்றின் மேல் செல்லலானான். ஜீலினின் குதிரை ஒரு வேட்டைக் குதிரை; அது அவனைக் குன்றின் மேல் சிறகுகளால் பறந்து செல்வது போல் கொண்டு சேர்த்தது. (அவன் அந்தக் குதிரையை குட்டியாக இருக்கும் பொழுதே ஒரு மந்தையிலிருந்து நூறு ரூபிள்களுக்கு வாங்கித் தானே அதை நன்கு பழக்கி இருந்தான்).அவன் குன்றின் உச்சியைச் சென்று அடைவதற்கும், கிட்டத்தட்ட முப்பது தார்த்தாரியர்களைத் தன் முன்னாலிருந்து நூறு கஜ தூரத்தில் காண்பதற்கும் சரியாக இருந்தது. அவர்களைக் கண்டதுமே அவன் திரும்ப எத்தனித்தான்; ஆனால் தார்த்தாரியர்களும் அவனைக் கண்டு விட்டனர்; முழு வேகத்தில் தங்கள் குதிரைகளை முடுக்கி விட்டு துப்பாக்கிகளை உயர்த்தியபடி அவனைத் தொடர்ந்தார்கள். “உனது துப்பாக்கியைத் தயாராக வை,” என்று கஸ்டிலீனை நோக்கிக் கத்தியவாறு, தன் குதிரையினால் முடிந்த அளவு வேகமாகப் பாய்ந்து இறங்கினான் ஜீலின்.

தனது எண்ணங்களில் தன் குதிரையிடமும் பேசினான்: ‘என் செல்லமே, என்னை இந்த இக்கட்டிலிருந்து தப்புவித்து விடு; இப்போது மட்டும் நீ தடுமாறினாயானால் எல்லாமே முடிந்து விடும். துப்பாக்கி இருக்குமிடத்தை நான் அடைந்து விட்டால் பின் அவர்களால் என்னைப் பிடித்துக் கைதியாக்க முடியாது.’
ஆனால் காத்திருப்பதற்குப் பதிலாக கஸ்டீலின் தார்த்தாரியர்களைக் கண்டதுமே கோட்டையை நோக்கி முழு வேகத்தில் ஓட ஆரம்பித்து விட்டான்; குதிரையையும் இரு புறங்களிலும் மாற்றி மாற்றி சாட்டையால் அடித்து விரட்டிய வண்ணம் ஓடிய அவனது குதிரையின் வால் ஒன்றே அந்தப் புழுதியினூடே காணக் கிடைத்தது.

ஜீலின் நிலைமை கடினமானதைக் கண்டான்; துப்பாக்கி போயாயிற்று. தன் கையிலுள்ள வாளை வைத்துக் கொண்டு அவன் என்ன செய்ய முடியும்? தனது குதிரையை தங்கள் பாதுகாப்புக் குழுவை நோக்கித் திருப்பினான்; ஆனால் ஆறு தார்த்தாரியர்கள் அவனை அந்த வழியில் மறைக்க விரைந்து வந்தார்கள். அவன் குதிரை வலிமை வாய்ந்தது தான் ஆனால் அவர்களது குதிரைகளோ இன்னும் வலிமை வாய்ந்தவை; மேலும், அவர்கள் இப்பொழுது அவனது பாதையின் குறுக்கே வந்து விட்டனர். அவன் தன் குதிரையின் சேணத்தைப் பிடித்திழுத்து வேறு வழியில் செலுத்த முயற்சித்தான்; ஆனால் அது மிக வேகமாகச் சென்றதனால் நிற்க முடியாமல் தார்த்தாரியர்கள் இருந்த திசை நோக்கி ஓடி, அவர்கள் மேலேயே மோதியது. சாம்பல் நிறக் குதிரையின் மீதமர்ந்த ஒரு சிவப்பு தாடிக்காரத் தார்த்தாரியன் தனது துப்பாக்கியை உயர்த்திய வண்ணம் சப்தமிட்டவாறு பல்லைக் காட்டி இளித்தபடி தன்னை நோக்கி வருவதைக் கண்டான்.

‘ஆஹா, உங்களை எனக்குத் தெரியும்; நீங்கள் பிசாசுகள் அல்லவோ? என்னை நீங்கள் உயிரோடு பிடித்து விட்டால், ஒரு குழியில் போட்டு அடித்துத் துவைத்து விடுவீர்களே. என்னை உயிரோடு பிடிக்க விட மாட்டேன்!’ என்று எண்ணிக் கொண்டான் ஜீலின்.

ஜீலின் உருவத்தில் பெரிய ஆகிருதியை உடையவனாக இல்லாவிடினும், மிகவும் தைரியசாலி. தனது வாளை உருவிக் கொண்டு அந்த சிவந்த தாடித் தார்த்தாரியன் மீது பாய்ந்தான்: ‘குதிரையைச் செலுத்தி இவனை வீழ்த்துவேன் அல்லது எனது வாளால் இவனை முடமாக்குவேன்,’ என எண்ணிக் கொண்டான்.

அவனிடமிருந்து இன்னும் ஒரு சிறிது தூரமே இருக்கும்போது, அவன் பின்னாலிருந்து துப்பாக்கியால் சுடப்பட்டான்; அவனது குதிரை அடிபட்டது. தனது மொத்த கனத்துடன் தரையில் விழுந்த அது ஜீலினைத் தரையில் நன்கு அழுத்தியது.

அவன் எழ முயற்சி செய்தான்; ஆனால், துர்க்குணம் படைத்த இரு தார்த்தாரியர்கள் ஏற்கனெவே அவன் மீது அமர்ந்து அழுத்திக் கொண்டு அவன் கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவன் பெரும் முயற்சி செய்து அவர்களைத் தள்ளி விட்டான்; ஆனாலும் மேலும் மூன்று பேர் தங்கள் குதிரைகளிலிருந்து குதித்திறங்கி, அவனது தலையைத் தங்கள் துப்பாக்கிக் கட்டையினால் விளாசலாயினர். கண்கள் இருள, அவன் கீழே விழுந்தான். தார்த்தாரியர்கள் அவனை இழுத்து, தங்கள் குதிரைகள் மேலிருந்த கயிறுகளால், அவனது கைகளை வளைத்துப் பின்புறமாகக் கட்டி தார்த்தாரியர்களுக்கே உரிய ஒருவித முடிச்சிட்டனர். அவனது தொப்பியைத் தட்டி விட்டு, பூட்சுகளைக் கால்களிலிருந்து இழுத்து, துணிகளைக் கிழித்து, அவனை முழுதும் சோதனையிட்டு அவனது பணத்தையும் கடிகாரத்தையும் எடுத்துக் கொண்டனர்.

ஜீலின் திரும்பித் தனது குதிரையை நோக்கினான். அந்தப் பாவப்பட்ட ஜீவன் ஒரு பக்கமாக விழுந்த வண்ணமே கிடந்தது; கால்களை உயரே உதைத்துக் கொண்டு தரையைத் தொட முடியாமல் தவித்தது. அதன் தலையில் குண்டடி பட்ட இடத்திலிருந்து கருங்குருதி பீய்ச்சியடித்து புழுதித் தரையை இரண்டடி தூரத்திற்குச் சேறாக்கியது.

ஒரு தார்த்தாரியன் அக்குதிரையின் பக்கம் சென்று அதன் சேணத்தைக் கழற்றி எடுக்க முயன்றான்; அது இன்னும் உதைத்தது; உடனே அவன் தனது குறுவாளை எடுத்து அதன் மூச்சுக் குழாயை அறுத்தான்.அதன் தொண்டையிலிருந்து ஒரு ஊதல் சப்தம் வந்தது, ஒருமுறை எம்பியபின் அக்குதிரையின் கதை முடிந்தது.

தார்த்தாரியர்கள் சேணத்தையும் மற்ற கயிறுகளையும் எடுத்துக் கொண்டனர். சிவப்பு தாடிக்காரத் தார்த்தாரியன் தனது குதிரையில் ஏறிக் கொண்டான்; மற்றவர்கள் ஜீலினை அவன் பின்னால் தூக்கி உட்கார வைத்தனர். அவன் விழுந்து விடாமலிருக்கும் பொருட்டு அவனை அந்தத் தார்த்தாரியனின் இடுப்புக் கச்சையுடன் பிணைத்தனர்; பின் அவர்கள் எல்லோரும் குன்றுகளை நோக்கிச் சவாரி செய்தனர்.

தார்த்தாரியனின் பின்பு ஜீலின் இப்படியும் அப்படியுமாக ஊசலாடிக் கொண்டும், அவனது தலை தார்த்தாரியனின் நாற்றமெடுக்கும் முதுகில் இடித்தவாறும் அமர்ந்திருந்தான். கட்டுமஸ்தான முதுகுப் பகுதியையும், வலிமை பொருந்திய கழுத்தையும் அதன் நன்றாக மழிக்கப்பட்ட நீல நிறமுள்ள பிடரியுடன் பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் அவனால் பார்க்க முடியவில்லை. ஜீலினின் தலையில் அடிபட்டிருந்தது.; கண்களின் மேல் ரத்தம் காய்ந்து போய் இருந்தது; அவனால் நகரவோ, அல்லது ரத்தத்தைத் துடைக்கவோ இயலவில்லை. அவனது கழுத்து எலும்புகள் வலிக்கும் வண்ணம் அவனது கைகள் இறுக்கிக் கட்டப் பட்டிருந்தன.

அவர்கள் குன்றுகளின் மேலும் கீழுமாக நெடுந்தூரம் சென்றனர். பின் ஒரு நதியை அடைந்து, அதை நடந்து கடந்து, ஒரு பள்ளத்தாக்கின் குறுக்காகச் செல்லும் கரடுமுரடான பாதையை அடைந்தனர்.

ஜீலின் அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று பார்க்க முயன்றான்; ஆனால் அவனுடைய கண்ணிமைகள் காய்ந்து போன ரத்தத்தால் ஒட்டிக் கொண்டிருந்தன; மேலும் அவனால் திரும்பக் கூட முடியவில்லை.

அந்தி மயங்க ஆரம்பித்தது; அவர்கள் இன்னொரு ஆற்றைத் தாண்டி கற்கள் நிறைந்த குன்றின் மீது சவாரி செய்தனர். இங்கு புகை வாசம் வந்தது, நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. அவர்கள் ஒரு ஆவுலை (தார்த்தாரியர்களின் கிராமம்) அடைந்தனர். தார்த்தாரியர்கள் தங்கள் குதிரைகளிலிருந்து இறங்கினர்; தார்த்தாரியச் சிறுவர்கள் வந்து ஜீலினைச் சூழ்ந்து கொண்டு நின்று மகிழ்ச்சிக் கூச்சலிட்டுக் கொண்டு அவன் மீது கற்களை வீசி எறிந்தனர்.

தார்த்தாரியன் அச்சிறுவர்களை விரட்டி விட்டு, ஜீலினைக் குதிரை மேலிருந்து இறக்கிய வண்ணம் தனது உதவியாளைக் கூப்பிட்டான். கன்னத்து எலும்புகள் மேல்நோக்கித் துருத்தியபடியும் ஒரு மேல்சட்டை மட்டும் (அது மிகவும் கிழிந்திருந்ததால் அவனது மார்பு முழுவதும் வெறுமையாக இருந்தது) அணிந்திருந்தவனுமான நோகை என்பவன் கூப்பிட்டவுடன் வந்தான். தார்த்தாரியன் அவனுக்கு கட்டளை பிறப்பித்தான். அவன் சென்று விலங்கினைக் கொண்டு வந்தான்; வலுவான ஓக் மரத்தினாலான இரு கட்டைகளுடன் இரும்பு வளையங்கள் இணைக்கப்பட்டு, ஒரு கொக்கியும் பூட்டும் ஒரு வளையத்தில் இணைக்கப் பட்டிருந்தன.

ஜீலினுடைய கைகளின் கட்டை அவர்கள் அவிழ்த்து விட்டு, விலங்கினை அவன் கால்களில் பூட்டி, அவனை ஒரு கட்டிடத்திற்கு இழுத்துச் சென்று, உள்ளே தள்ளிக் கதவையும் பூட்டினார்கள்.ஜீலின் ஒரு எருக் குவியலின் மீது விழுந்தான். கொஞ்ச நேரம் அசையாமல் கிடந்து விட்டுப் பின் மென்மையாக உள்ள ஒரு இடத்தை துழாவிக் கண்டுபிடித்து அமர்ந்தான்.

2

அன்றைய இரவு ஜீலினால் உறங்கவே முடியவில்லை. இரவுகள் குறுகியதாக உள்ள காலமாதலால் பகல் வெளிச்சம் சுவரிலிருந்த ஒரு குறுகிய பிளவின் வழியாகத் தென்பட்டது. அவன் எழுந்து, அந்தப் பிளவை இன்னும் பெரிதாக்குமாறு அதைச் சுரண்டி வெளியே நோட்டமிட்டான்.

அந்தத் துளையின் வழியே அடிவாரத்துக்குச் செல்லும் ஒரு பாதையை அவன் கண்டான்; வலது பக்கம் ஒரு தார்த்தாரியக் குடிசை அதனருகே இருந்தது; அதன் வாயிலில் ஒரு கறுப்பு நாய் படுத்திருந்தது, ஒரு வெள்ளாடும் குட்டிகளும் வால்களை ஆட்டிய வண்ணம் ஓடியாடிக் கொண்டிருந்தன. பளிச்சென்ற நிறத்தில் நீளமான 'தொள தொள'வென்ற சட்டையையும் அதனடியிலிருந்து தென்பட்ட டிரௌசரும் உயரமான பூட்ஸுகளையும் அணிந்திருந்த ஒரு இளைய தார்த்தாரியப் பெண்ணையும் அவன் கண்டான். அவள் தலைமீது ஒரு கோட்டைக் கவிழ்த்துக் கொண்டு அதன் மீது ஒரு நீர் நிரம்பிய பாத்திரத்தை எடுத்துக் கொண்டு

சென்றாள். ஒரு சட்டையைத் தவிர வேறொன்றும் அணியாத ஒரு மொட்டைத் தலை தார்த்தாரியச் சிறுவனை அவள் கையில் பிடித்து அழைத்துச் சென்று கொண்டிருந்தாள்; அவ்வாறு அவள் நடந்து சென்ற போது, அவளது பின்புறத்து தசைப்பகுதிகள் அசைந்தன. அப்பெண் நீரை அக்குடிசைக்குள் எடுத்துச் சென்றாள்; சிறிது நேரத்தில் நேற்றுக் கண்ட சிவந்த தாடித் தார்த்தாரியன் ஒரு பட்டு உடையை அணிந்து வெளியே வந்தான்; அவனது இடையிலிருந்து ஒரு வெள்ளிப்பிடி கொண்ட குறுவாள் தொங்கியது; வெறும் கால்களில் ஷூக்களை அணிந்து கொண்டு தலையின் பின்புறமாக கறுப்பு ஆட்டின் தோலாலான ஒரு உயரமான தொப்பியையும் அணிந்திருந்தான். அவன் வெளியே வந்து உடலை நீட்டி முறித்து, தனது சிவந்த தாடியைத் தடவிக் கொண்டான். சிறிது நேரம் அங்கு நின்று விட்டு தன் வேலையாளுக்கு ஒரு கட்டளையிட்டுவிட்டுச் சென்றான்.

பின்பு இரு பையன்கள் நீர் அருந்தச் செய்த தங்கள் குதிரைகளின் மீது சவாரி செய்து சென்றார்கள். அந்தக் குதிரைகளின் நாசிகள் ஈரமாக இருந்தன. டிரவுசர்கள் இல்லாமலும் சட்டைகளைத் தவிர வேறொன்றும் அணியாத இன்னும் சில மொட்டைத் தலை சிறுவர்கள் ஓடினர். அவர்கள் கும்பலாக அந்தக் கட்டிடத்திற்கு வந்து ஒரு சிறு குச்சியை எடுத்து அந்தச் சிறிய துவாரத்தின் உள்ளே நுழைக்கலாயினர். ஜீலின் ஒரு அதட்டல் போட்டான்; உடனே அந்தச் சிறுவர்கள் கிறீச்சிட்டுக் கொண்டு தங்கள் வெறுமையான முட்டங்கால்கள் பள பளக்க ஓட்டமாக ஓடினார்கள்.

ஜீலினுக்கு மிகவும் தாகமாக இருந்தது. அவனது தொண்டை உலர்ந்து போயிருந்தது; அவன் இவ்வாறு எண்ணலானான்: ‘அவர்கள் மட்டும் இங்கு வந்து என்னைப் பார்த்தார்களானால் நன்றாக இருக்குமே!’

யாரோ அந்தக் கட்டிடத்தின் பூட்டைத் திறக்கும் ஓசையைக் கேட்டான். சிவந்த தாடித் தார்த்தாரியன் பளபளக்கும் கருவிழிகளும், சிவந்த கன்னங்களும், குட்டையான தாடியும் கொண்ட இன்னொரு கரிய சிறிய மனிதனுடன் உள்ளே நுழைந்தான். அந்த இன்னொரு மனிதன் எப்போதும் சிரித்த முகத்தினனாக விளங்கினான். இவன் மற்றவனை விடப் பகட்டான உடைகளை அணிந்திருந்தான். அவன் நீல நிறத்துப் பட்டில் சரிகை வேலைப்பாடு செய்த ஒரு அங்கி, இடுப்புக் கச்சையில் செருகிய ஒரு பெரிய வெள்ளிக் குத்துவாள், வெள்ளியில் வேலைப்பாடு செய்த மொராக்கோ செருப்புகள், அவற்றின் மீது அணிந்த கெட்டியான காலணிகள், வெள்ளை நிறத்தில் ஒரு ஆட்டுத்தோல் தொப்பி இவற்றை அணிந்திருந்தான்.

சிவந்த தாடித் தார்த்தாரியன் உள்ளே நுழைந்து, கோபத்தில் இருப்பதைப் போல் எதையோ முணுமுணுத்துக் கொண்டு தன் குறுவாளுடன் விளையாடிய வண்ணம் ஜீலினை சந்தேகப் பார்வை பார்த்தபடி ஓநாய் போலக் கதவுக் கட்டையின் மீது

சாய்ந்து நின்றான். அந்தக் கரியவன் ஸ்ப்ரிங்க் மீது நடப்பதைப் போல் விரைந்து நடந்து வந்து ஜீலின் முன்பு சம்மணமிட்டு அமர்ந்து, அவன் தோளின் மீது ஓங்கித் தட்டி விட்டு தன்னுடைய பாஷையில் வெகுவேகமாகப் பேச ஆரம்பித்தான். அவன் பற்களைக் காட்டி இளித்த வண்ணம் கண்களைச் சிமிட்டியபடியும், நாவால் ஒலியெழுப்பிய படியும் திரும்பத் திரும்ப, "நல்ல ருஸ், நல்ல ருஸ்," என்றபடி இருந்தான்.

ஜீலினுக்கு ஒரு வார்த்தையும் புரியவில்லை. ஆனால் அவன், "எனக்குக் குடிக்க நீர் கொடுங்கள்," என்றான்.

கரிய மனிதன் சிரிக்க மட்டும் செய்தான். "நல்ல ருஸ்," என்று தனது பாஷையில் பேசிக் கொண்டே இருந்தான்.

ஜீலின் தனது கைகளாலும் உதடுகளாலும் தனக்குக் குடிக்க நீர் வேண்டும் என்று சைகை செய்தான்.

கரிய மனிதனுக்கு இப்போது புரிந்தது. அவன் சிரித்த வண்ணம், கதவின் வெளிப்புறம் நோக்கி யாரையோ கூப்பிட்டான், "டீனா."

ஒரு சிறிய பெண் ஓடோடி வந்தாள்: அவளுக்குப் பதின்மூன்று வயதிருக்கலாம்; மெலிந்து ஒல்லியாக, கரிய தார்த்தாரியனை ஜாடையில் ஒத்து இருந்தாள். அவள் அவனுடைய மகள் என்பது புலனாகியது. அவளுக்கும் கரிய விழிகளுடன் முகம் பார்க்க நன்றாக இருந்தது. அகலமான கைகளையுடைய நீளமான ஒரு நீல நிறச் சட்டையை இடுப்பில் கட்டும் கச்சையில்லாமல் அணிந்திருந்தாள். அவளுடைய ஆடையின் ஓரங்களிலும் முன்புறத்திலும் சிகப்பு நிறத் துணியால் தைக்கப் பட்டிருந்தது. அவள் காற்குழாயும் செருப்புகளும் அணிந்து அதன் மீது உயரமான குதிகால்களைக் கொண்ட காலணிகளையும் அணிந்திருந்தாள். அவள் கழுத்தில், வெள்ளி ருஷ்யக் காசுகளாலான ஒரு மாலை இருந்தது. அவள் தலையைத் துணியால் மூடவில்லை; அவளது கருநிறத் தலைமுடி ரிப்பனால் பின்னப்பட்டு ஜரிகைப் பின்னலாலும் வெள்ளிக் காசுகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

அவள் தந்தை ஏதோ கட்டளையிட்டதும் அவள் ஓடோடிப் போய் உலோகத்தாலான ஒரு நீர்ப் பாத்திரத்துடன் ஓடி வந்தாள். அதை ஜீலினிடம் கொடுத்தவள், தன் தலையைக் குனிந்து முழங்காலளவு புதைத்துக் கொண்டு அவன் முன்பு அமர்ந்து கொண்டாள்; ஜீலின் நீர் பருகுவதை, தன் கண்களை அகல விரித்து அவன் ஒரு காட்டு மிருகம் என்பது போலப் பார்த்தாள்.

ஜீலின் காலியான நீர்ப் பாத்திரத்தை அவளிடம் திரும்பக் கொடுத்ததும், அவள் ஒரு ஆட்டைப் போல் பின்புறம் துள்ளிக் குதித்தது அவள் தந்தையைச் சிரிப்படையச்

செய்தது. அவன் அவளை வேறு ஏதோ வேலைக்காக அனுப்பினான். அவள் அந்த நீர்ப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினாள்; ஒரு வட்டமான மரப் பலகையின் மீது சிறிது ரொட்டியைக் கொண்டு வந்தாள். பிறகு அவள் முன்பு போலக் கவிழ்ந்து அமர்ந்தபடி அவனை வெறித்த கண்களால் பார்க்கலானாள்.

பின் அந்தத் தார்த்தாரியர்கள் கதவைப் பூட்டிக் கொண்டு சென்றனர்.

சிறிது நேரத்தின் பின் நோகை வந்து," அய்டா, எஜமான், அய்டா," என்றான்.

அவனுக்கும் ரஷ்ய மொழி தெரியவில்லை. தன்னை வேறு எங்கேயோ போகச் சொல்கிறான் என்று மட்டும் ஜீலின் புரிந்து கொண்டான்.

ஜீலின் அந்த நோகையைப் பின் தொடர்ந்து சென்றான்; தளைகள் கால்களை இழுத்தமையால் நடக்க முடியாமல் நொண்டியவாறு சென்றான். அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே வந்ததும் அவன் கிட்டத் தட்ட பத்து வீடுகளையும் சிறிய கோபுரத்தைக் கொண்ட ஒரு தார்த்தாரிய தேவாலயத்தையும் உடைய ஒரு தார்த்தாரிய கிராமத்தைக் கண்டான். சேணம் பூட்டப் பெற்ற மூன்று குதிரைகள் ஒரு வீட்டின் முன்பு நின்றன; சிறு பையன்கள் அவற்றின் கடிவாளங்களைப் பிடித்தபடி நின்றனர். கரிய நிறத்தானாகிய தார்த்தாரியன் அந்த வீட்டிலிருந்து வெளியே வந்து, தன்னைத் தொடருமாறு ஜீலினுக்கு சைகை செய்தான்.பின் தனது மொழியில் ஏதோ கூறி நகைத்தவாறு, திரும்பவும் அந்த வீட்டுக்குள் சென்றான்.

ஜீலின் உள்ளே நுழைந்தான். அந்த அறை நன்றாக இருந்தது: சுவர்கள் களிமண்ணால் நன்கு மெழுகப் பட்டிருந்தன. முன்பக்க சுவரின் அருகே பறவைச் சிறகுகளினாலான படுக்கைகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன; பக்கத்துச் சுவர்களில் தரை விரிப்புகள் தொங்க விடப் பட்டிருந்தன. அவற்றின் மீது வெள்ளியால் வேலைப்படுகள் செய்யப்பட்ட துப்பாக்கிகள், சிறு கைத் துப்பாக்கிகள், வாட்கள் ஆகியவை பதிக்கப் பட்டிருந்தன. ஒரு சுவரினருகே மண்தரையில் பதிக்கப் பட்ட ஒரு அடுப்பு இருந்தது. தானியப் போரடிக்கும் களம் போலத் தரையே சுத்தமாக இருந்தது. ஒரு மூலையில் இருந்த பெரிய இடத்தில் தடிமனான கம்பளி விரிக்கப்பட்டு அதன் மீது ஜமக்காளங்களும், அவற்றின் மீது மிருதுவான இறகுகளால் நிரப்பப் பட்ட மெத்தைகளும் இருந்தன. அந்த மெத்தைகளின் மீது ஐந்து தார்த்தாரியர்கள் அமர்ந்திருந்தனர்; கரிய நிறத்தவன், சிவப்புத் தலையன், மேலும் மூன்று விருந்தினர்கள். அவர்கள் வீட்டினுள் அணியும் காலணிகளை அணிந்து, பின்னால் உள்ள திண்டுகளில் சாய்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் முன்பு ஒரு வட்டவடிவமான பலகையில் தானியக் கேக்குகளும், ஒரு கிண்ணத்தில் வெண்ணையும் ஒரு ஜாடியில் பூஸா எனப்படும் தார்த்தாரிய பியரும் இருந்தன. அவர்கள் அந்தக் கேக்குகளையும் வெண்ணையையும் கைகளால் எடுத்துத் தின்றனர்.

கருப்பு மனிதன் குதித்தெழுந்து, ஜீலினை ஜமக்காளத்தில் அல்லாமல் தரையில் ஒரு பக்கமாக அமர வைக்குமாறு கட்டளையிட்டான்; பின் அவன் ஜமக்காளத்தில் அமர்ந்து கொண்டு தனது விருந்தினர்களுக்கு தானியக் கேக்குகளையும், பூஸாவையும் வழங்கினான். ஜீலினை அமர வைத்த பின் அந்த வேலைக்காரன் தனது காலணிகளைக் கழற்றி கதவருகே மற்றவர்களின் காலணிகள் இருந்த இடத்தில் வைத்தான்; கம்பள விரிப்பில் தன் எஜமானர்களின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அவர்கள் உண்பதைப் பார்த்த வண்ணம் தன் உதடுகளைச் சப்புக் கொட்டிக் கொண்டான்.

தார்த்தாரியர்கள் தமக்கு வேண்டிய மட்டும் உண்டனர்; அந்தச் சிறிய பெண்ணைப் போலவே நீண்ட அங்கியும் கால் சராயும் அணிந்து தலையில் ஒரு கைக்குட்டையைக் கட்டியிருந்த ஒரு பெண்மணி வந்து எஞ்சிய உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு போனாள்; ஒரு வாயகன்ற பாத்திரத்தையும். நீண்ட வளைந்த கழுத்து கொண்ட ஜாடியையும் கொண்டு வந்தாள். தார்த்தாரியர்கள் தங்கள் கைகளைக் கழுவிக் கொண்டு, முழங்காலிட்டுக் கைகளை மடித்துக் கொண்டு நான்கு பக்கங்களையும் நோக்கி வாயால் ஊதிவிட்டுத் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தினர். அவர்கள் தங்களுக்குள் சிறிது நேரம் உரையாடிய பின்பு அவர்களுள் ஒருவன் ஜீலினை நோக்கித் திரும்பி ருஷ்ய மொழியில் அவனுடன் உரையாட ஆரம்பித்தான்.

“காஸி-முகம்மது உன்னைச் சிறைப் பிடித்தான்,” சிவப்பு தாடித் தார்த்தாரியனை நோக்கிக் கை காட்டிய வண்ணம் அவன் சொல்லலானான், “இப்போது காஸி-முகம்மது உன்னை அப்துல் முரத்துக்குக் கொடுத்துள்ளான்,” கரிய நிறத்தவனை நோக்கிக் கை காட்டினான், “ஆகவே அப்துல் முரத் இப்போது உன்னுடைய எஜமானன்.”

ஜீலின் பேசாமலிருந்தான். இப்போது அப்துல் முரத் சிரித்த வண்ணம் பேச ஆரம்பித்தான், “ருஷ்ய சிப்பாய், நல்ல ருஷ்யன்,” என்று ஜீலினைக் காட்டித் திரும்பத் திரும்பக் கூறினான்.

மொழிபெயர்ப்பவன் ஜீலினை நோக்கி, “உன் வீட்டிற்குக் கடிதம் எழுதி உன்னை மீட்க ஒரு தொகை அனுப்புமாறு அவன் கட்டளை இடுகிறான். பணம் வந்தவுடன் உன்னை விடுதலை செய்வான்,” என்றான்.

ஜீலின் ஒரு நிமிடம் யோசித்த பின்பு, “எத்தனை மீட்புத் தொகை அவன் கேட்கிறான்?” என்றான்.

தார்த்தாரியர்கள் சிறிது நேரம் தங்களுக்குள் பேசிக் கொண்ட பின்பு, மொழி பெயர்ப்பவன் ஜீலினிடம், “மூவாயிரம் ரூபிள்கள் (ருஷ்யப் பணம்),” என்றான்.

“முடியாது,” என்றான் ஜீலின், “என்னால் அவ்வளவு பெரிய தொகை கொடுக்க இயலாது.”

துள்ளிக் குதித்து எழுந்த அப்துல், கைகளை ஆட்டிக் கொண்டு முன்பு செய்ததைப் போல அவன் புரிந்து கொள்வான் என எண்ணிக் கொண்டு ஜீலினிடம் பேசலானான்.

மொழிபெயர்ப்பவன் மொழி பெயர்த்தான்: “எவ்வளவு கொடுப்பாய்?”

ஜீலின் சிறிது யோசித்த பின், “ஐநூறு ரூபிள்கள்,” என்றான்.

இதனைக் கேட்ட அந்தத் தார்த்தாரியர்கள் எல்லாரும் ஒரே சமயத்தில் தங்களுக்குள் பேசிக் கொள்ளலாயினர். சிவப்பு தாடிக்காரனை நோக்கி அப்துல் கத்த ஆரம்பித்து வேகமாகப் பிதற்றியதில் அவனது வாயிலிருந்து எச்சில் பீச்சித் தெறித்தது. சிவப்பு தாடிக்காரன் கண்களை உருட்டிய வண்ணம் நாவால் ஒலியெழுப்பினான்.

சிறிது நேரத்திற்குப்பின் அவர்கள் அமைதியாயினர். மொழிபெயர்ப்பாளன், ” எஜமானனுக்கு ஐநூறு ரூபிள்கள் போதாது. அவனே உனக்காக இருநூறு ரூபிள்கள் விலை கொடுத்திருக்கிறான். காஸி-முகம்மது அவனிடம் கடன் பட்டிருந்ததால் அதற்கு ஈடாக உன்னை எடுத்துக் கொண்டான். மூவாயிரம் ரூபிள்கள்! அதற்குக் குறைய முடியாது. நீ கடிதம் எழுத மறுத்தால், உன்னை ஒரு குழியில் போட்டு நன்றாக ஒரு சாட்டையால் அடிப்பார்கள்,” என்றான்.

“ஆஹா! எத்தனைக்கெத்தனை ஒருவன் பயப்படுகிறானோ, அத்தனைக்கத்தனை நிலைமை மோசமாகிறது,” என ஜீலின் எண்ணிக் கொண்டான்.

அவன் துள்ளியெழுந்து கூறினான், “அவன் என்னைப் பயமுறுத்தினால், நான் கடிதமே எழுத மாட்டேன் என்று நீ அந்த நாயிடம் சொல். அவனுக்கு ஒன்றுமே கிடைக்காது. எனக்கு நாய்களாகிய உங்களிடம் பயமில்லை, இனியும் பயப்பட மாட்டேன்.”

மொழிபெயர்ப்பாளன் இதை மொழி பெயர்த்ததும் அவர்கள் திரும்பவும் எல்லாருமாக ஒரே நேரத்தில் பேச ஆரம்பித்தனர்.

ரொம்ப நேரம் பேசிய பின்பு கரிய நிற மனிதன் துள்ளியெழுந்து ஜீலினிடம் வந்து கூறினான், “திகிட் ருஸ்! திகிட் ருஸ்!.” (அவர்கள் மொழியில் திகிட் என்றால், தைரியமானவன் என்று அர்த்தம்). பின்பு சிரித்தபடி, மொழிபெயர்ப்பாளனிடம் ஏதோ கூறினான். அவன் அதை ஜீலினுக்கு மொழி பெயர்த்தான், “ஆயிரம் ரூபிள்கள் அவனுக்கு திருப்திகரமாக இருக்கும்.”

ஜீலின் விடாப்பிடியாக, “நான் ஐநூறுக்கு மேல் கொடுக்கவே முடியாது. நீங்கள் என்னை கொன்று விட்டால் பின் அதுவும் உங்களுக்குக் கிடைக்காது,” என்றான்.

தார்த்தாரியர்கள் திரும்பவும் தமக்குள் கூடிப் பேசினார்கள்; பிறகு எதையோ கொண்டு வர வேண்டி வேலைக்காரனை அனுப்பி விட்டுக் கதவையும் ஜீலினையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் இருந்தனர். ஒரு பருமனான, கிழிசல் உடையணிந்த, வெறுங்கால்களுடன், காலில் தளை அணிவிக்கப்பட்ட மனிதன் பின் தொடர அந்த வேலைக்காரன் திரும்பி வந்தான்.

ஜீலின் அவனைக் கண்டு வியப்பால் வாய் பிளந்தான்: ஏனெனில் அது கஸ்டீலின்! அவனும் சிறை பிடிக்கப் பட்டிருந்தான். இருவரையும் பக்கத்தில் இருத்தினர்; உடனே அவர்கள் தமக்கு நேர்ந்தவைகளை ஒருவருக்கொருவர் கூறிக் கொள்ளத் துவங்கினர். அவர்கள் பேசிக் கொள்வதைத் தார்த்தாரியர்கள் சப்தமிடாமல் கவனித்தனர். ஜீலின் தனக்கு என்ன நேர்ந்தது என விவரித்தான்; கஸ்டீலினும் தன் குதிரை நின்று விட்டதையும், தன் துப்பாக்கி குறி தவறியதையும், இதே அப்துல் அவனை முந்தி வந்து பிடித்ததையும் கூறினான்.

அப்துல் துள்ளியெழுந்து, கஸ்டீலினைச் சுட்டி ஏதோ கூறினான். மொழிபெயர்ப்பாளன் அவர்கள் இருவரும் இப்போது ஒரே எஜமானனுக்கு சொந்தம் என்றும், முதலில் மீட்புத் தொகையைக் கொடுப்பவன் முதலில் விடுதலை செய்யப்படுவான் என்றும் கூறினான்.

“இதோ பார்,” என்று அவன் ஜீலினிடம், ” நீ கோபப் படுகிறாய், ஆனால் உன் நண்பன் அமைதியாக இருக்கிறான்; அவன் ஐயாயிரம் ரூபிள்கள் அனுப்பும்படி தன் வீட்டிற்குக் கடிதம் எழுதியிருக்கிறான். அதனால் அவனுக்கு நல்ல உணவு கொடுக்கப்பட்டு, நன்றாக நடத்தவும் படுவான்,” என்றான்.

“என் நண்பன் அவன் விருப்பப்படி செய்யட்டும்; அவன் பணக்காரனாக இருக்கலாம், நான் இல்லை. அது நான் கூறிய படி தான். வேண்டுமானால் என்னைக் கொன்று விடுங்கள்- உங்களுக்கு அதனால் ஒன்றும் லாபம் கிடைக்கப் போவதில்லை; ஆனால் நான் ஐநூறு ரூபிள்களுக்கு மேல் அனுப்ப எழுத மாட்டேன்,” என்றான் ஜீலின்.

அவர்கள் ஒன்றும் பேசவில்லை. திடீரென்று அப்துல் துள்ளிக் குதித்தெழுந்து, ஒரு சிறிய பெட்டியைக் கொண்டு வந்தான்; அதிலிருந்து ஒரு பேனா, மசி, ஒரு துண்டுக் காகிதம் எல்லாவற்றையும் எடுத்து ஜீலினிடம் கொடுத்து, அவன் தோளைத் தட்டி, கடிதம் எழுதுமாறு சைகை செய்தான். அவன் ஐநூறு ரூபிள்களைப் பெற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டு விட்டான்.

“சற்றுப் பொறு,” என்றான் ஜீலின் அந்த மொழிபெயர்ப்பாளனிடம்; “எங்களுக்கு ஒழுங்காக சாப்பாடு போட வேண்டும்; உடைகள், பூட்ஸுகள் கொடுக்க வேண்டும்; நாங்கள் சேர்ந்தே இருக்க வேண்டும் என்று அவனிடம் சொல். எங்களுக்கு அது மகிழ்ச்சியை அளிக்கும். மேலும் இந்தத் தளைகளை எங்கள் கால்களிலிருந்து எடுத்து விட வேண்டும்,” என்றபடி அந்த எஜமானனைப் பார்த்துச் சிரித்தான்.

எஜமானனும் சிரித்த வண்ணம் மொழிபெயர்ப்பாளன் கூறியதைக் கேட்டுவிட்டுக் கூறினான், “நான் அவர்களுக்கு மிக உயர்ந்த ஆடைகளைக் கொடுக்கிறேன்; திருமணம் செய்து கொள்ளத் தகுதியான ஒரு போர்வையையும் பூட்ஸுகளையும் தருகிறேன். இளவரசர்களுக்குக் கொடுப்பது போன்ற உணவை அளிக்கிறேன்; அவர்களுக்கு விருப்பமானால், இந்தக் கொட்டிலில் அவர்கள் சேர்ந்தே இருக்கலாம். ஆனால் நான் அவர்களுடைய கால் தளைகளைக் கழற்ற மாட்டேன்; ஏனெனில் அவர்கள் தப்பித்து ஓடி விடுவார்கள். ஆனால் இரவு வேளைகளில் வேண்டுமானால் அவற்றைக் கழற்றி விடலாம்.” அவன் குதித்தெழுந்து ஜீலினின் முதுகில் ஓங்கித் தட்டிய வண்ணம் சொன்னான், “நீ நல்லவன், நான் நல்லவன்!.”

ஜீலின் வேண்டுமென்றே தவறான முகவரிக்குக் கடிதம் எழுதினான்; அது தன் இலக்கைச் சென்றடையாது என அவனுக்குத் தெரியும். ‘நான் தப்பி ஓடி விடுவேன்,’ என அவன் நினைத்துக் கொண்டான்.

ஜீலினும் கஸ்டீலினும் கொட்டிலுக்குத் திரும்ப அழைத்துச் செல்லப் பட்டு, அவர்களுக்கு சிறிது சோளப் புல், ஒரு பாத்திரத்தில் நீர், சிறிது ரொட்டி, இரு பழைய மேலங்கிகள், மேலும் தேய்ந்து பழையதான சில ராணுவ பூட்ஸுகள் (நிச்சயமாக இவை இறந்து போன ருஷ்ய வீரர்களின் சடலங்களிலிருந்து எடுக்கப் பட்டவை ஆகும்) கொடுக்கப்பட்டன. இரவு வேளைகளில் அவர்கள் கால்களிலிருந்து விலங்குகள் எடுக்கப் பட்டு, அவர்கள் கொட்டிலில் பூட்டி வைக்கப் பட்டனர்.

3

ஜீலினும் அவனது நண்பனும் ஒரு மாதம் முழுமையும் இவ்வாறு வாழ்ந்தனர். அவர்களது எஜமானன் எப்பொழுதும் சிரித்தவாறே, “நீ, இவான், நல்லவன்! நான், அப்துல், நல்லவன்!” என்று கூறிக் கொள்வான். ஆனால் அவன் அவர்களுக்கு நல்ல உணவு தரவில்லை; சரியாகத் தயாரிக்கப் படாத, தானிய மாவினால் சுடப்பட்ட தட்டையான ரொட்டியையோ அல்லது சுட்டே இராத மாவையோ கொடுத்தான்.

கஸ்டீலின் இரண்டாவது முறையாகத் தன் வீட்டிற்குக் கடிதம் எழுதி விட்டு, உற்சாகமின்றி பணம் வரும் நாளை எதிர் பார்த்துக் கொண்டிருந்ததைத் தவிர ஒன்றும் செய்யாமல் இருந்தான். அவன் நாட்கணக்கில் அந்தக் கொட்டிலில் படுத்து உறங்குவதையும், அல்லது கடிதம் வரும் வரை நாட்களை எண்ணிக் கொண்டிருப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஜீலினுக்குத் தன் கடிதம் எங்கும் போய்ச் சேராது எனத் தெரியுமாதலால், அவன் இன்னொரு கடிதம் எழுதவில்லை. அவன் இவ்வாறு எண்ணினான்: ‘என்னை மீட்பதற்கு எங்கிருந்து என் தாய்க்கு இத்தனை பணம் கிடைக்கப் போகிறது? ஏற்கெனவே அவள் நான் அனுப்புவதை வைத்துக் கொண்டு தான் வாழ்ந்து கொண்டிருந்தாள். ஐநூறு ரூபிள்கள் சம்பாதிக்க வேண்டுமெனில், அவள் நாசமாகிப் போவாள். கடவுளின் அருளால், நான் எப்படியாவது தப்பி விடுவேன்!’

ஆகவே அவன் தான் தப்பித்துச் செல்லும் வழியை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருந்தான்.

அவன் சீட்டி அடித்தவாறு அந்த ஆவுலைச் சுற்றி நடந்தான்; அவன் கைவேலைகளில் வல்லவனாக இருந்ததால் உட்கார்ந்த வண்ணம் களிமண்ணால் பொம்மைகள் செய்தான் அல்லது குச்சிகளினால் கூடைகள் முடைந்தான்.

ஒரு தடவை அவன் ஒரு தார்த்தாரியனைப் போன்ற பொம்மையை மூக்கு, கைகள், கால்கள், தார்த்தாரிய உடைகள் இவற்றுடன் உருவாக்கி, கூரையின் மேல் காட்சிக்கு வைத்தான். தார்த்தாரியப் பெண்கள் நீர் கொண்டு வர வெளியே வந்தபோது, எஜமானனின் பெண்ணான டீனா அவர்களைக் கூப்பிட்டு அதைக் காட்டினாள்; அவர்கள் தங்கள் பாத்திரங்களைக் கீழே வைத்து விட்டு நின்று கொண்டு அதைப் பார்த்துச் சிரித்தனர். ஜீலின் அந்த பொம்மையை எடுத்து அவர்களிடம் நீட்டினான். அவர்கள் சிரித்தனரே தவிர தைரியமாக அதை வாங்கிக் கொள்ளவில்லை. அவன் அந்த பொம்மையைக் கீழே வைத்து விட்டு, என்ன தான் ஆகிறதென்று பார்க்கலாம் என்று கொட்டிலினுள் சென்று விட்டான்.

டீனா பொம்மை இருந்த இடத்திற்கு ஓடிச் சென்று, சுற்று முற்றும் பார்த்து விட்டு, அதை எடுத்துக் கொண்டு ஓடினாள்.

காலையில், பொழுது விடிந்ததும் அவன் வெளியே பார்த்தான். டீனா வீட்டினின்றும் வெளியே வந்து, சிவப்பு நிறத் துணித் துண்டுகளால் தான் அலங்கரித்திருந்த பொம்மையுடன் வாயிற்படியில் அமர்ந்த வண்ணம் அதை ஒரு குழந்தையைப் போல் ஆட்டியபடி, ஒரு தார்த்தாரியத் தாலாட்டைப் பாடினாள். ஒரு வயதான மாது வெளியே வந்து அவளைக் கடிந்து கொண்டு, அந்த பொம்மையைப் பிடுங்கித் துண்டுகளாகச் சிதைத்துப் போட்டு விட்டு, டீனாவை வேறு வேலைகளைப் பார்க்க அனுப்பினாள்.

ஆனால் ஜீலின் முன்னதை விட நன்றாக இன்னொரு பொம்மை செய்து டீனாவிற்குக் கொடுத்தான். ஒரு நாள் டீனா ஒரு சிறு பாத்திரத்தைக் கொண்டு வந்து அவன் முன்பு தரையில் வைத்துவிட்டு, அவனை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்தாள்; சிரித்த வண்ணம் அதைச் சுட்டிக் காட்டினாள்.

‘அவளை இவ்வாறு மகிழ்விப்பது என்ன?’ என ஜீலின் ஆச்சரியப் பட்டான். அந்தப் பாத்திரத்தில் நீர் உள்ளது என எண்ணிய வண்ணம் அவன் அதை எடுத்தான்; ஆனால் அதில் இருந்ததோ பால். அந்தப் பாலை அவன் குடித்து விட்டு, “நன்றாக இருந்தது,” என்றான்.

டீனா எவ்வளவு மகிழ்ச்சியடைந்தாள்! “நல்லது, இவான், நல்லது!” எனக் கூறிக் கொண்டு குதித்தெழுந்து கைகளைக் கொட்டினாள். பின் அந்தப் பாத்திரத்தை

எடுத்துக் கொண்டு ஓடிப் போனாள். அதன் பின் அவள் தினமும் அவனுக்காகக் கொஞ்சம் பாலைத் திருட்டுத் தனமாகக் கொண்டு வர ஆரம்பித்தாள்.

தார்த்தாரியர்கள் ஆட்டின் பாலிலிருந்து ஒருவிதமான பாலடைக் கட்டியைத் தயாரித்து அதனைத் தம் வீட்டுக் கூரைகளின் மேல் உலர்த்துவார்கள்; சில சமயங்களில் தந்திரமாக அவள் இந்தப் பாலடைக் கட்டியையும் சிறிது கொண்டு வரலானாள். ஒருமுறை அப்துல் ஒரு ஆட்டைக் கொன்ற போது அவள் ஜீலினுக்காக ஒரு துண்டு மாமிசத்தை தன் சட்டையின் கைமடிப்பில் ஒளித்துக் கொண்டு வந்தாள். அவள் இந்தப் பொருட்களை அவன் முன் விட்டெறிந்து விட்டு ஓடி விடுவாள்.

ஒரு நாள் பெருத்த புயற்காற்றுடன் மழை கொட்டோ கொட்டென்று ஒரு மணி நேரத்திற்கு மேல் கொட்டியது. எல்லா ஓடைகளிலும் நீர் கலங்கலாக ஓடியது. ஆற்றைக் கடக்குமிடத்தில் ஏழடி உயரத்திற்கு நீர் உயர்ந்தது; பாயும் நீரின் விசை அதிகமாக இருந்ததால், அது கற்களை எல்லாம் உருட்டிப் புரட்டிச் சென்றது. எங்கும் சிற்றோடைகள் உருவாகி ஓடின; மலைகளின் இடி முழக்கம் ஓயவேயில்லை. புயல் அடித்து ஓய்ந்ததும், கிராமத்துத் தெருக்களில் நீர் தாரைகளாக ஓடியது. ஜீலின் அவனது எஜமானனிடமிருந்து ஒரு கத்தியைக் கடன் வாங்கி, அதைக் கொண்டு ஒரு உருளையைத் தயார் செய்தான்; இரு சிறு பலகைகளையும் வெட்டி, ஒரு சக்கரத்தைத் தயாரித்து அதன் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக இரு பொம்மைகளைப் பொருத்தினான். சிறுமிகள் கொடுத்த துணித் துண்டுகளால் அவற்றை ஒரு குடியானவன், குடியானவப் பெண் போல உடை உடுத்துவித்தான். அவற்றைப் பின் சரியான இடங்களில் பொருத்தி, நீர்த் தாரைகளில் சக்கரத்தைச் சுழல விட்டான். சக்கரம் சுழல ஆரம்பித்ததும், பொம்மைகள் நடனமாட ஆரம்பித்தன.

கிராமம் முழுமையும் அங்கு கூடி விட்டது. சிறு பையன்களும் சிறுமிகளும், தார்த்தாரிய ஆண்களும் பெண்களும் வந்து நின்று கொண்டு நாவால் ஒலியெழுப்பினர்.

“ஆ, ருஸ்! ஆ இவான்!.”

அப்துலிடம் ஒரு உடைந்த ருஷ்ய கடிகாரம் இருந்தது. அவன் ஜீலினை அழைத்து நாவால் ஒலியெழுப்பியபடி அவனிடம் அதைக் காட்டினான்.

“என்னிடம் அதைக் கொடு. நான் அதை சரி பண்ணித் தருகிறேன்,” என்றான் ஜீலின்.

ஜீலின் அதைக் கத்தியால் பல பாகங்களாகப் பிரித்துப் பின் பாகங்களை ஒழுங்கு படுத்தித் திரும்பவும் அவற்றை ஒன்று சேர்த்து அந்த கடிகாரத்தைச் சரி செய்து விட்டான்.

மகிழ்ச்சியடைந்த எஜமானன், நிறையத் துளைகள் இருக்கும் தனது ஒரு பழைய மேலங்கியை அவனுக்குப் பரிசளித்தான். ஜீலின் வேறு வழியில்லாமல் அதைப் பெற்றுக் கொண்டான். எப்படியானாலும் அவன் அதை இரவு நேரத்தில் போர்வையாகவாவது உபயோகித்துக் கொள்ளலாம்.

இதன் பின் ஜீலினின் புகழ் பரவியது; தூரத்து கிராமங்களிலிருந்தெல்லாம் தார்த்தாரியர்கள் ஒரு துப்பாக்கி, கைத்துப்பாக்கி, அல்லது ஒரு கைக்கடிகாரம் இவற்றை சரி செய்வதற்காகக் கொண்டு வரலானார்கள். அவனது எஜமானன் அவனுக்கு இதற்காகச் சில உபகரணங்களைக் கொடுத்தான்- இடுக்கி, துரப்பணம், ஒரு அரம் முதலியன.

ஒரு நாள் ஒரு தார்த்தாரியனுக்கு உடல் நிலை சரியில்லாமல் போயிற்று. அவர்கள் ஜீலினிடம் வந்து, “வா, அவனைக் குணமாக்கு!” என்றனர். ஜீலினுக்கு மருத்துவத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதெனினும் அவன் சென்று பார்த்து விட்டுப் பின் வருமாறு தனக்குள் எண்ணிக் கொண்டான், “ஒருவேளை அவன் தானே குணமாகி விடலாம்.”

அவன் கொட்டிலிற்குத் திரும்பி வந்து சிறிது மணலையும் நீரையும் கலந்தான்; பின் அத்தார்த்தாரியர்கள் முன்னிலையில் எதையோ அதன் மீது முணுமுணுத்து விட்டு அதை அந்த நோயாளிக்குக் குடிக்கக் கொடுத்தான். அவன் அதிர்ஷ்டம், அந்தத் தார்த்தாரியன் குணமடைந்து விட்டான்.

ஜீலின் அவர்களுடைய மொழியைச் சிறிது சிறிதாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்தான்; சில தார்த்தாரியர்கள் அவனுடன் நெருங்கிப் பழகலானார்கள். அவன் உதவி தேவைப் படும் பொழுது, “இவான்! இவான்!” என அழைத்தனர். மற்றவர்கள் அவனை இன்னும் சந்தேகத்துடனே ஒரு காட்டு மிருகத்தைப் பார்ப்பது போல் பார்த்தனர்.

சிவந்த தாடித் தார்த்தாரியனுக்கு ஜீலினைப் பிடிக்கவில்லை. ஜீலினைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் முகத்தைச் சுளிக்கவோ, தலையைத் திருப்பிக் கொள்ளவோ அல்லது திட்டவோ செய்தான். அந்த ஆவுலில் வசிக்காத இன்னொரு முதியவனும் இருந்தான்; அவன் அவ்வப்பொழுது மலை அடிவாரத்திலிருந்து ஏறி வருவான். அவன் ஜீலின் இருந்த இடத்தின் வழியாக மசூதிக்குச் செல்லும் பொழுதுகளில் மட்டுமே ஜீலின் அவனைப் பார்ப்பான். அவன் குள்ளமாகவும், ஒரு வெள்ளை நிறத் துணியைத் தனது தொப்பியின் மீது சுற்றிக் கொண்டும் இருந்தான்.

அவனது தாடியும் மீசையும் கத்தரிக்கப்பட்டு, பனி போல் வெண்மையாகவும், முகம் சுருங்கிச் செங்கல் நிறமாகவும் இருந்தது. அவன் மூக்கு கழுகினுடையதைப் போல் வளைந்தும், சாம்பல் நிறக் கண்கள் கொடூரமாகவும் இருந்தன: அவன் வாயில் இரு கோரைப் பற்களைத் தவிர வேறு பற்களே இல்லை. தலைப்பாகையுடன் கோலின் மீது சாய்ந்த வண்ணம், தன்னைச் சுற்றி ஓநாய் போல முறைத்துப் பார்த்துக் கொண்டு அவன் கடந்து செல்வான். அவன் ஜீலினைப் பார்த்து விட்டால் சினத்துடன் பெருமூச்செறிந்த வண்ணம் திரும்பிக் கொள்வான்.

அந்த முதியவன் எங்கே வசிக்கிறான் எனப் பார்ப்பதற்காக ஒரு சமயம் ஜீலின் மலையிலிருந்து கீழிறங்கிச் சென்றான். பாதை வழியே கீழிறங்கிச் சென்று, கற்சுவரால் சூழப்பட்ட ஒரு சிறிய தோட்டத்தைக் கண்டான்; அந்தச் சுவரின் பின்னால், செர்ரி, ஆப்ரிகாட் மரங்களையும், தட்டையான கூரையையும் உடைய ஒரு குடிசையையும் கண்டான். அவன் இன்னும் சற்று நெருங்கிய போது, பின்னப்பட்ட வைக்கோலால் செய்யப்பட்ட தேன்கூடுகளையும், ரீங்காரமிட்டபடி பறந்து கொண்டிருக்கும் தேனீக்களையும் கண்டான். அந்த முதியவன் முழங்காலிட்டு அமர்ந்தபடி ஒரு தேன்கூட்டில் என்னவோ செய்து கொண்டிருந்தான். ஜீலின் எம்பிப் பார்த்தபோது அவனுடைய கால்தளைகள் சப்தமெழுப்பின. உடனே திரும்பிப் பார்த்த முதியவன், உரக்கக் கத்திய வண்ணம், தனது கைத்துப்பாக்கியை இடுப்புக் கச்சையிலிருந்து எடுத்து ஜீலினை நோக்கிச் சுட்டான்; ஜீலின் அந்தக் கற்சுவரின் பின்னால் பாதுகாப்பாகப் பதுங்கிக் கொண்டான்.

முதியவன் ஜீலினின் எஜமானனிடம் புகார் கூறச் சென்றான். எஜமானன் சிரித்தபடியே ஜீலினைக் கூப்பிட்டு, “நீ ஏன் அந்த முதியவன் வீட்டிற்குச் சென்றாய்?” எனக் கேட்டான்.

“நான் அவனுக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை,” என்ற ஜீலின், “அவன் எவ்வாறு வாழ்கிறான் எனப் பார்க்க ஆசைப் பட்டேன்,” என்றான்.

எஜமானன் ஜீலின் கூறியதைத் திருப்பிக் கூறினான்.

ஆனால் அந்த முதியவன் கடுங்கோபத்திலிருந்தான்; அவன் சீறிய வண்ணம் பிதற்றிக் கொண்டு, கோரைப் பற்களைக் காட்டிய வண்ணம் தனது முஷ்டிகளை ஜீலினை நோக்கி உயர்த்திக் காட்டினான்.

ஜீலினுக்கு எல்லாமும் புரியா விட்டாலும், அந்த முதியவன் அப்துலிடம் ருஷ்யர்களைத் தங்கள் ஆவுலில் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும்,

கொன்றுவிட வேண்டுமென்றும் கூறினான் எனப் புரிந்து கொண்டான். ஒரு வழியாக அந்த முதியவன் கிளம்பிப் போனான்.

ஜீலின் தன் எஜமானனிடம் அந்த முதியவன் யார் எனக் கேட்டான்.

“அவன் ஒரு பெரிய மனிதன்!” என்றான் எஜமான். “எங்களிலேயே மிகவும் வீரம் படைத்தவன் அவன் தான்; நிறைய ருஷ்யர்களைக் கொன்றவன்; ஒரு காலத்தில் மிகவும் செல்வந்தனாக இருந்தான். அவனுக்கு மூன்று மனைவிகளும் எட்டு மகன்களும் இருந்தனர்; எல்லாரும் ஒரே கிராமத்தில் வசித்தனர். ருஷ்யர்கள் வந்து அந்த கிராமத்தை அழித்து அவனது ஏழு மகன்களைக் கொன்று விட்டனர். எஞ்சிய ஒரு மகனும் ருஷ்யர்களிடம் சரணடைந்து விட்டான். இந்த முதியவனும் சென்று ருஷ்யர்களிடம் சரணடைந்து அவர்களுடன் மூன்று மாதங்கள் வசித்தான். அந்த நாட்களின் கடைசியில் அவன் தன் மகனைத் தேடிக் கண்டு பிடித்துத் தன் கரங்களாலேயே அவனைக் கொன்று விட்டுத் தப்பி வந்து விட்டான். அதன் பிறகு அவன் சண்டை செய்வதையே விட்டு விட்டு, மெக்கா சென்று கடவுளிடம் வேண்டிக் கொண்டான்; அதனால் தான் தலைப்பாகை அணிந்திருக்கிறான். ஒருவன் மெக்காவிற்குச் சென்று திரும்பினால் அவன் ‘ஹாஜி,’ என்று அழைக்கப்படுவான்; அவன் தலைப்பாகையும் அணிந்திருப்பான். அவனுக்கு உங்கள் மனிதர்களைக் கண்டால் அறவே பிடிக்காது. என்னிடம் உன்னைக் கொன்று விடக் கூறுகிறான். ஆனால் நான் உன்னைக் கொல்ல முடியாது. நான் உன்னைப் பணம் கொடுத்து வாங்கியிருக்கிறேன்; மேலும் எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. உன்னைக் கொல்வதை விட, நான் உனக்கு வாக்குறுதி கொடுத்திரா விட்டால், உன்னைப் போகக் கூட விட மாட்டேன், இவான்,” என்று சிரித்தபடி, ருஷ்ய மொழியில், “நீ இவான், நல்லவன்; நான் அப்துல், நல்லவன்!” என்றான்.

4

இவ்வாறு ஜீலின் ஒரு மாத காலம் வாழ்ந்தான். பகல் வேளைகளில் அவன் அந்த ஆவுலைச் சுற்றி சோம்பித் திரிந்தவாறோ அல்லது கைவேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டோ இருப்பான்; ஆனால் இரவுகளில் ஆவுலில் எல்லாம் அமைதியாக உள்ள வேளைகளில் அந்தக் கொட்டிலின் தரையைத் தோண்டுவான். அது கற்கள் நிறைந்து இருந்ததால், தோண்டுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை; ஆனால் அவன் தனது அரத்தை வைத்துக் கொண்டு கடினமாக வேலை செய்து, ஒரு ஆள் நுழையுமளவுக்குப் பெரிய ஒரு பள்ளத்தை சுவற்றினடியில் பண்ணி விட்டான்.

'எனக்கு மட்டும் இந்த நிலத்தின் அமைப்பை அறிந்து கொள்ள முடிந்தால், எந்த வழியில் போகலாம் எனத் தெரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்,' என எண்ணிக் கொண்டவன், 'ஆனால் எந்த ஒரு தார்த்தாரியனும் எனக்கு இதை எல்லாம் சொல்ல மாட்டான்,' எனவும் எண்ணிக் கொண்டான்.

ஆகவே அவன் தனது எஜமானன் வீட்டிலில்லாத ஒரு தினத்தைத் தேர்ந்தெடுத்து, இரவு உணவுக்குப் பின் கிராமத்திற்குப் பின்புறமிருந்த குன்றின் மீதேறி சுற்று முற்றும் நோட்டம் விடக் கிளம்பினான். ஆனால் எஜமானன் எப்போதும் தான் வீட்டை விட்டுக் கிளம்பு முன் ஜீலின் மீது கவனம் வைத்துக் கொள்ளவும் அவனைத் தன் கண்காணிப்பிலிருந்து விட்டு விடாமலிருக்கவும் தன் மகனுக்கு

உத்தரவிட்டு விட்டுத் தான் போவான். ஆகவே அந்தச் சிறுவன் ஜீலின் பின்னால், "போகாதே! தகப்பன் இதை அனுமதிக்க மாட்டான். நீ திரும்பி வராவிட்டால் நான் அக்கம் பக்கத்திலுள்ளவர்களைக் கூப்பிடுவேன்," என்று கத்தியபடி ஓடினான்.

ஜீலின் அவனைச் சமாதானப் படுத்த முயன்றபடி, "நான் வெகு தூரம் செல்லவில்லை; அந்தக் குன்றின் மீது தான் ஏறப் போகிறேன். உடல்நிலை சரியில்லாதவர்களைக் குணமாக்கும் மூலிகை ஒன்றினைத் தேடிக் கொண்டிருக்கிறேன். நீ வேண்டுமானால் என் கூடவே வரலாம். இந்தத் தளைகளுடன் நான் எப்படி ஓடிவிட முடியும்? நாளைக்கு நான் உனக்கு ஒரு வில்லும் அம்புகளும் செய்து தருவேன்," எனக் கூறினான்.

இவ்வாறு அந்தச் சிறுவனை சமாதானப் படுத்தி அழைத்துச் சென்றான். பார்க்கும் போது அந்தக் குன்று மிக உயரம் இல்லாதது போல் தான் காணப்பட்டது; ஆனால் காலில் தளைகளுடன் அதன் மீது ஏறுவது கடினமாக இருந்தது. ஜீலின் நில்லாமல் சென்று, ஒரு வழியாகக் குன்றின் உச்சியை அடைந்தான். அங்கு அவன் அமர்ந்தபடி அந்த நிலப் பரப்பின் அமைப்பு எவ்வாறு உள்ளது எனப் பார்த்துக் கொண்டான். தெற்குப் பக்கமாக, கொட்டிலைத் தாண்டி, ஒரு பள்ளத் தாக்கில் மந்தையாகக் குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்தன; பள்ளத் தாக்கின் கீழ் இன்னொரு ஆவுல் தென்பட்டது. அதன் பின்புறம் செங்குத்தான இன்னொரு குன்றும், அதன் பின் மேலும் ஒரு குன்றும் இருந்தன. குன்றுகளுக்கிடையே இருந்த நீலநிறப் பரப்பில், காடுகளும், இன்னும் தொலைவில் உயரமாக எழும் மலைகளும் தென்பட்டன. மிகவும் உயரமான மலை மீது சீனி போலப் பனி படர்ந்திருந்தது; ஒரு பனி முகடு மற்ற எல்லா முகடுகளையும் விட உயரமாக இருந்தது. கிழக்கிலும் மேற்கிலும் இத்தகைய குன்றுகள் காணப்பட்டன; இங்கும் அங்கும் பள்ளத் தாக்குகளில் இருந்த ஆவுல்களிலிருந்து புகை எழுந்து கொண்டிருந்தது. 'ஆ, இவை அனைத்துமே தார்த்தாரியப் பிரதேசம்,' என அவன் எண்ணிக் கொண்டான். பின் அவன் ருஷ்யப் பகுதிப் பக்கம் திரும்பி நோக்கினான். அவனது காலடிப் பக்கம், ஒரு ஆறும், அவன் வசித்த ஆவுலும், சிறு தோட்டங்களால் சூழப்பட்டுக் காட்சியளித்தன. ஆற்றினருகே அமர்ந்து துணிகளை நீரில் அலசிக் கொண்டிருந்த பெண்கள் சிறு பொம்மைகளைப் போல் காட்சியளித்தனர். இந்த ஆவுலைத் தாண்டி இருந்த ஒரு குன்று தெற்குப் பக்கம் இருந்த குன்றை விடத் தாழ்வாக இருந்தது; அதன் பின்னாலிருந்த இரு குன்றுகளில் மரங்கள் அடர்த்தியாக இருந்தன; இவற்றின் இடையே ஒரு நீலநிறமான சமவெளியும், அதைத் தாண்டி வெகு தொலைவில் புகை மண்டலம் போல ஒன்றும் காணப்பட்டன. ஜீலின் தான் கோட்டையில் இருந்த பொழுது எங்கு சூரியன் உதிக்கும் எங்கு மறையும் என நினைவு படுத்திக் கொள்ள முயன்றான்; சந்தேகமேயில்லை: ருஷ்யக் கோட்டை அந்த சமவெளியில் தான் இருக்க வேண்டும். அவன் தப்பி ஓடும் பொழுது இந்த இரு குன்றுகளுக்கும் இடையே தான் தன் பாதையைத் தெரிவு செய்ய வேண்டும்.

சூரியன் மறைய ஆரம்பித்தது. வெள்ளையான பனிமலைகள் சிவந்த நிறத்திற்கு மாறின; கரிய மலைகள் இன்னும் கறுப்பாகின; மலைச்சந்துகளிலிருந்து பனிமூட்டம் எழுந்தது; அவன் ருஷ்யக் கோட்டை இருக்கின்றது என்று எண்ணியிருந்த பள்ளத்தாக்கு, மறையும் சூரியனின் ஒளியில் நெருப்புப் பற்றி எரிவது போல் காணப்பட்டது. ஜீலின் கவனமாகப் பார்த்தான். ஏதோ ஒன்று புகைபோக்கியிலிருந்து வரும் புகை போல அசையக் கண்டான்; ருஷ்யக் கோட்டை அங்கு தான் இருக்கின்றதென்று உறுதி கொண்டான்.

வெகு நேரமாகி விட்டது. முல்லாவின் தொழுகைக் குரல் கேட்டது. மந்தைகள் வீட்டை நோக்கி விரட்டப் பட்டுக் கொண்டிருந்தன; பசுக்கள் கத்திய சப்தமும் கேட்டது; சிறுவன், "வீடு செல்லலாம்!" எனக் கூறிக் கொண்டே இருந்தான். ஆனால் ஜீலினுக்கு அங்கிருந்து கிளம்பவே மனம் வரவில்லை.

கடைசியில் ஒருவழியாக அவர்கள் திரும்பிச் சென்றனர். 'நல்லது,' என எண்ணினான் ஜீலின், 'இப்போது எனக்கு வழி தெரிந்து விட்டது; ஆகையால் தப்பிச் செல்ல வேளை வந்து விட்டது.' அவன் அன்றிரவே தப்பி ஓடிவிட எண்ணினான். இரவுகள் இருளாக இருந்தன- அது தேய்பிறை நிலவாகும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாகத் தார்த்தாரியர்கள் அன்று இரவே வீடு வந்து விட்டனர். அவர்கள் வழக்கமாக மாட்டு மந்தைகளை ஓட்டிக் கொண்டும், உற்சாகமாகவும் திரும்பி வருவர். ஆனால் இந்த முறை மாட்டு மந்தைகள் இல்லை. அவர்கள் கொண்டு வந்தது ஒரு தார்த்தாரியனின் இறந்து போன உடலைத் தான்- சிவப்பு தாடிக்காரனின் சகோதரன் கொல்லப் பட்டிருந்தான். அவர்கள் உள்ளுக்குள் கோபத்துடன் காணப் பட்டனர்; அவனை அடக்கம் செய்வதற்காக எல்லாரும் குழுமினர். ஜீலினும் அதைக் காண்பதற்காக வெளியில் வந்தான்.

அவர்கள் அந்த உடலைச் சவப்பெட்டி இல்லாமல் ஒரு துணியில் சுற்றி, கிராமத்தை விட்டு வெளியே எடுத்துச் சென்று மரங்களின் கீழ் புல்தரையில் கிடத்தினர். முல்லாவும் சில முதியவர்களும் அங்கு வந்தனர். அவர்கள் தங்கள் தொப்பிகளில் துணியைச் சுற்றிக் கொண்டு, காலணிகளைக் கழற்றி விட்டு, இறந்தவன் உடலருகே குதிகால் மீது சம்மணமிட்டு, அருகருகே அமர்ந்தனர்.

முல்லா முன்பக்கம் இருந்தான்; அவன் பின்புறம் வரிசையாக தலைப்பாகை அணிந்த மூன்று முதியவர்களும் அவர்களின் பின்புறம் மற்ற தார்த்தாரியர்களும் இருந்தனர். எல்லாரும் கண்களைத் தாழ்த்திய வண்ணம் அமைதியாக இருந்தனர். ரொம்ப நேரத்திற்குப் பிறகு முல்லா தன் தலையை நிமிர்த்தி, "அல்லாஹ்!" (கடவுளே) என்றான். அவனது அந்த ஒரு வார்த்தைக்குப் பிறகு அனைவரும் தங்கள் கண்களைத் தாழ்த்திய வண்ணம் திரும்பவும் நீண்ட நேரம் அமைதியாக

இருந்தனர். அவர்கள் சிறிதும் சப்தம் செய்யாமலோ, அசையாமலோ அமைதியாக உட்கார்ந்திருந்தனர்.

திரும்பவும் முல்லா தன் தலையை நிமிர்த்தி, “அல்லாஹ்!” என்றிட அனைவரும் ,”அல்லாஹ்! அல்லாஹ்!” என்று விட்டு அமைதியாயினர்.

அந்த இறந்தவனின் உடல் அசைவின்றிப் புல் மேல் கிடந்தது; அவர்களும் இறந்தவர்கள் போல அசைவின்றி அமர்ந்திருந்தனர். ஒருவர் கூட அசையவில்லை. மரங்களின் இலைகள் காற்றில் அசைந்தபோது எழுந்த ஒலியைத் தவிர வேறு ஒரு ஓசையும் அங்கே இல்லை. முல்லா ஒரு தொழுகையைத் திரும்பக் கூறிய பின் அனைவரும் எழுந்தனர். அந்த இறந்த உடலைத் தங்கள் கரங்களில் தூக்கிக் கொண்டு தரையில் இருந்த ஒரு குழியினருகே சென்றனர். அது ஒரு சாதாரணக் குழி அன்று; தரையின் அடியில் நிலவறை போலத் தோண்டப் பட்ட ஒரு கல்லறை ஆகும். இறந்தவனின் உடலைக் கரங்களின் அடியில் பிடித்த வண்ணம், கால்களைப் பற்றிக் கொண்டு, மெதுவாகக் கல்லறையின் உள்ளே இறக்கி நிலத்தின் அடியின் உட்கார்ந்த நிலையில் வைத்துக் கரங்களை முன்புறம் மடித்தும் வைத்தனர்.

நோகை ஆனவன் கொஞ்சம் பசுமையான புல்லைக் கொண்டு வர, அதையும் அந்தக் குழியினுள் திணித்து, அதை விரைவாக மண்ணால் மூடி விட்டு, தரையைச் சமன் செய்தனர். நேரான ஒரு கல்லை அந்தக் கல்லறையின் தலைப்பக்கம் நட்டனர். பின் தரைமீது ஒழுங்குபட நடந்து திரும்பவும் வரிசையாக அந்தக் கல்லறையின் முன் அமர்ந்து நீண்ட நேரம் அமைதியாக இருந்தனர்.

கடைசியில் அனைவரும் எழுந்து பெருமூச்சு விட்டபடி, “அல்லாஹ்! அல்லாஹ்! அல்லாஹ்!” என்றனர்.

சிவந்த தாடித் தார்த்தாரியன் அந்த முதியவர்களுக்குப் பணம் கொடுத்தான். பின்பு எழுந்து ஒரு சாட்டையினால் தனது நெற்றியில் மூன்று முறை அடித்துக் கொண்டு விட்டு, வீடு திரும்பினான்.

அடுத்த நாள் காலையில் சிவப்பு நிறத் தார்த்தாரியன் மூன்று பேர் தன்னைப் பின் தொடர ஒரு பெண் குதிரையை அந்தக் கிராமத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்வதை ஜீலின் கண்ணுற்றான். அவர்கள் அந்தக் கிராமத்தின் எல்லையைத் தாண்டியதும், சிவந்த தாடித் தார்த்தாரியன் தனது மேலங்கியைக் கழற்றி விட்டுத் தனது பலமான கைகள் தெரியும் வண்ணம் சட்டைக் கைகளை மடித்து விட்டுக் கொண்டான். பின்பு ஒரு குறுவாளை எடுத்து அதை ஒரு சாணைக்கல்லின் மீது தீட்டலானான். மற்றத் தார்த்தாரியர்கள் அந்தப் பெண்குதிரையின் தலையை உயர்த்திப் பிடிக்க அவன் அதன் கழுத்தை வெட்டிக் கீழே வீழ்த்தினான்; பின் தனது

பெரிய கைகளால் அதன் தோலைத் தளர்த்திய வண்ணம் உரிக்கலானான். பெரிய ஸ்த்ரீகளும் சிறு பெண்களும் வந்து அதன் குடலையும் உட்பாகங்களையும் கழுவினர். அந்தக் குதிரையை வெட்டித் துண்டங்களாக்கிக் குடிசையினுள் எடுத்துச் சென்றனர்; மொத்த கிராமமும் சிவப்புத் தார்த்தாரியனின் குடிசையில் சாவு விருந்துக்காகக் கூடியது.

மூன்று நாட்கள் வரை அவர்கள் அந்தக் குதிரையின் மாமிசத்தை உண்ட வண்ணம், பூஸாவையும் குடித்துக் கொண்டு, இறந்தவனுக்காகப் பிரார்த்தனை செய்தனர். எல்லாத் தார்த்தாரியர்களும் வீட்டிலேயே இருந்தனர். நாலாவது நாள் அவர்கள் செல்லத் தயாரானதை ஜீலின் கவனித்தான். குதிரைகள் வெளியே கொண்டு வரப்பட்டுத் தயார் செய்யப் பட்டன; சுமார் பத்து பேர் (சிவப்புத் தார்த்தாரியனும் அதில் ஒருவன்) அவற்றில் ஏறிச் சென்றனர்; ஆனால் அப்துல் மட்டும் வீட்டிலேயே தங்கி விட்டான். அமாவாசை ஆனதால் இரவுகள் இருளாகவே இருந்தன.

'ஆ! இன்று இரவே தப்பிக்க நல்ல நேரம்,' என ஜீலின் எண்ணிக் கொண்டான். கஸ்டீலினிடமும் அதைக் கூறினான்; ஆனால் கஸ்டீலினின் உள்ளம் அவனுடன் ஒத்துழைக்கவில்லை.

"நாம் எவ்வாறு தப்பிச் செல்வது? நமக்கு வழி கூடத் தெரியாது," என்றான் அவன்.

"எனக்கு வழி தெரியும்," என்றான் ஜீலின்.

"உனக்கு வழி தெரிந்தால் கூட நாம் ஒரே இரவில் கோட்டையை அடைய முடியாது," என்றான் கஸ்டீலின்.

"அவ்வாறு முடியா விட்டால் நாம் காட்டில் தூங்கலாம். இதோ பார், நான் கொஞ்சம் பாலாடைக் கட்டிகளைச் சேமித்து வைத்திருக்கிறேன். இங்கேயே உட்கார்ந்து அழுது கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? உன் வீட்டினர் மீட்புத் தொகையை அனுப்பிவிட்டால், நல்லது தான்- ஆனால் அவர்களால் அதைச் சேகரிக்க முடியவில்லை என்றால் என்ன செய்வது? ருஷ்யர்கள் அவர்கள் ஆட்களில் ஒருவனைக் கொன்று விட்டதால் தார்த்தாரியர்கள் இப்போது கோபமாக இருக்கின்றனர். நம்மைக் கொல்வதைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்," என்றான் ஜீலின்.

கஸ்டீலின் சிறிது யோசனை செய்தான்.

"நல்லது, நாம் போகலாம்," என்றான்.

5

ஜீலின் தான் தோண்டியிருந்த குழிக்குள் சப்தமின்றி நகர்ந்து போய், கஸ்டிலீனும் அதற்குள் நுழையும் வண்ணம் அதை அகலமாக்கினான்; பின்பு ஆவுலில் எல்லாம் அமைதியாக ஆகும் வரை அவர்கள் அமர்ந்து காத்திருந்தனர்.

எல்லாம் முழுவதுமாக அமைதியான உடன், ஜீலின் சுவற்றினடியே குழியினுள் சப்தமின்றித் தவழ்ந்து வெளியே போய், கஸ்டீலினிடம் ரகசியக் குரலில், “வா!” என்றான். கஸ்டீலினும் தவழ்ந்து வெளியே வந்தான்; ஆனால் வரும்பொழுது அவனது காலில் ஒரு கல் இடறவே, சப்தம் ஏற்பட்டது. எஜமானனிடத்தில் துஷ்டத் தனம் மிகுந்த ஓல்யாஷின் என்ற பெயர் கொண்ட, புள்ளிகள் நிறைந்த ஒரு காவல் நாய் இருந்தது. ஓல்யாஷின் இந்த சப்தத்தைக் கேட்டதும் குரைத்தபடி குதிக்க ஆரம்பிக்கவே, மற்ற நாய்களும் அதனுடன் சேர்ந்து கொண்டு அதையே செய்தன. ஜீலின் மெல்லியதாகச் சீட்டியடித்தபடி அதற்கு ஒரு சிறிய துண்டு பாலாடைக் கட்டியை வீசினான். ஓல்யாஷின் ஜீலினை அடையாளம் கண்டு கொண்டு, குரைப்பதை நிறுத்தி வாலை ஆட்டியது.

ஆனால் எஜமானனுக்கு நாய் குரைத்தது கேட்டதால் அவன் தன் குடிசையிலிருந்து, “ஹாய்ட், ஹாய்ட், ஓல்யாஷின்!” என்று கத்தினான். ஜீலினும் அதன் காதுகளின் பின்புறத்தைச் சொறிந்து கொடுத்தான்; அதுவும் அமைதியாகி, அவன் கால்களில் தன் உடலைத் தேய்த்த வண்ணம் வாலை ஆட்டியது.

அவர்கள் ஒரு மூலையில் சிறிது நேரம் ஒளிந்து கொண்டு உட்கார்ந்திருந்தனர். திரும்பவும் எல்லாம் அமைதியாகி, தொழுவத்திலிருந்து ஒரு செம்மறியாடு இருமும் சப்தமும், பள்ளத்தினுள் அலைகளை உண்டாக்கிய வண்ணம் நீர் ஓடிய சப்தமும் கேட்டன. அந்த இருட்டுப் பொழுதில், வானில் நட்சத்திரங்கள் வெகு உயரத்தில் இருந்தன; புதிய பிறை நிலவு தனது கொம்புகளை உயர்த்திய வண்ணம் சிவந்த நிறம் காட்டியபடி குன்றின் பின் மறைந்தது. பள்ளத் தாக்குகளில் மூடுபனி பால் போல் வெண்மையாகக் காட்சியளித்தது.

ஜீலின் எழுந்து நின்று தன் கூட்டாளியிடம், ” நல்லது நண்பா, தொடர்ந்து வா!” என்றான்.

அவர்கள் புறப்பட்டனர்; ஆனால் சில அடிகள் எடுத்து வைத்ததுமே கூரை மீதிருந்து முல்லாவின் அறைகூவல், “அல்லாஹ், பிஸ்மில்லாஹ்! இல்ரஹ்மான்!” எனக் கேட்டது. அப்பொழுது மக்கள் எல்லாரும் மசூதிக்குத் தொழுகைக்குச் செல்வார்கள் என்று அர்த்தம். ஆகவே அவர்கள் திரும்பவும் ஒரு சுவரின் பின் மறைந்து அமர்ந்து எல்லாரும் சென்று முடியும் வரையில் வெகு நேரம் காத்திருந்தனர். ஒருவழியாகத் திரும்பவும் எல்லாம் அமைதியாகியது.

“இப்போது போகலாம்! கடவுள் நம்முடன் இருக்கட்டும்!” என்றபடி சிலுவைக் குறியிட்டுக் கொண்டு, அவர்கள் திரும்பவும் புறப்பட்டனர். ஒரு முற்றத்தின் வழியாகச் சென்று, குன்றிலிருந்து ஆற்றை நோக்கி இறங்கி, பின் அந்த ஆற்றையும் கடந்து, பள்ளத்தாக்கின் வழியாகச் சென்றனர்.

தரையின் அருகில் மட்டும் மூடுபனி அடர்த்தியாக இருந்தது; உயரத்தில் நட்சத்திரங்கள் பிரகாசமாக ஒளிர்ந்தன. ஜீலின் அவர்களின் பாதையை நட்சத்திரங்களின் மூலம் கண்டறிந்தான். குளிர்ச்சியான மூடுபனியில் நடப்பது சுலபமாக இருந்தது; அவர்களுடைய பூட்ஸுகள் தான் மிகவும் அதிக உபயோகத்தால் தேய்ந்து போய் ரொம்பவும் அசௌகரியமாக இருந்தன. ஜீலின் தன்னுடையவற்றைக் கழற்றித் தூக்கி எறிந்து விட்டு வெறுங்கால்களால் நடந்தான்; கற்களைத் தாண்டிக் குதித்தபடி தன் பாதையை நட்சத்திரங்களின் வழிகாட்டலால் கண்டு கொண்டு சென்றான். கஸ்டீலின் சிறிது பின் தங்க ஆரம்பிக்கலானான்.

“மெல்ல நட. இந்த நாசமாய்ப்போன பூட்ஸுகள் என் காலில் கொப்புளங்களை உண்டாக்கி விட்டன,” என்றான்.

“அவற்றைக் கழற்றி விடு! அவை இல்லாமல் நடப்பது சுலபமாக இருக்கும்,” என்றான் ஜீலின்.

கஸ்டீலின் வெறுங்கால்களால் நடந்தான்; ஆனால் அவன் நிலை இன்னும் மோசமாகியது. கற்கள் அவன் கால்களைக் குத்திக் கிழித்ததால் அவன் திரும்பவும் பின் தங்கலானான். ஜீலின் அவனிடம், “உன் கால்களில் கல் குத்திப் புண்பட்டால், திரும்ப குணமாகி விடும்; ஆனால் தார்த்தாரியர்கள் நம்மைப் பிடித்துக் கொலை செய்தால், அது இன்னுமே மோசம்!” என்றான்.
கஸ்டீலின் பதிலேதும் கூறவில்லை. ஆனால் முக்கி முனகிய வண்ணம் தொடர்ந்து நடந்தான்.

அவர்கள் அந்தப் பள்ளத்தாக்கின் வழியாக நீண்ட நேரம் சென்றனர். திடீரென, வலது புறத்தில் நாய்கள் குரைப்பது கேட்டது. ஜீலின் நின்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, கைகளால் துழாவிய வண்ணம் குன்றின் மீது ஏறலானான்.

“ஆ! நாம் தவறுதலாக, ரொம்பவும் வலது புறத்தில் சென்று விட்டோம். இங்கு நான் அன்று குன்றின் மேலிருந்து பார்த்த இன்னொரு ஆவுல் இருக்கிறது. நாம் திரும்பி இடது பக்கம் உள்ள குன்றின் மேல் ஏறிச் செல்ல வேண்டும். அங்கு ஒரு காடு இருக்கும்,” என்றான் ஜீலின்.

ஆனால் கஸ்டீலின், ” சிறிது நேரம் பொறு! நான் கொஞ்சம் மூச்சு வாங்கிக் கொள்கிறேன். கற்கள் என் கால்களைக் கிழித்துப் புண்ணாக்கி ரத்தம் வந்து கொண்டிருக்கிறது,” என்றான்.

“கவலைப் படாதே நண்பா! அவை திரும்ப குணமாகி விடும். நீ இன்னும் கொஞ்சம் லேசாகத் தாவ வேண்டும். இதோ, இது போல!” என்றான் ஜீலின்.

அவன் திரும்பி ஓடி, இடதுபுறம் திரும்பி மலை மேல் ஏறிக் காட்டை நோக்கிச் செல்லலானான்.

கஸ்டீலின் முக்கி முனகியபடி இன்னமுமே பின் தங்கியிருந்தான். ஜீலின், “உஷ்!” என்றபடி சென்று கொண்டேயிருந்தான்.

அவர்கள் குன்றின் மீது ஏறி ஜீலின் கூறியபடி ஒரு காட்டை அடைந்தனர். காட்டினுள் நுழைந்து முட்புதர்களூடே சென்றனர்; அவர்களது உடைகள் அவற்றில்

மாட்டிக் கிழிந்தன. கடைசியாக ஒரு பாதையைக் கண்டு பிடித்து அதில் தொடர்ந்து நடந்தனர்.

“நில்!,” என்றான் ஜீலின். அவர்கள் அசையாமல் நின்று, ‘தொப், தொப்’ என்ற குளம்போசையை அந்தப் பாதையில் செவி மடுத்தனர். அது ஒரு குதிரையின் கால் குளம்போசை போல இருந்தது; ஆனால் நின்று விட்டது. அவர்கள் நகர்ந்ததும் திரும்பவும் அந்தக் குளம்போசை கேட்டது; அவர்கள் நின்றதும் அதுவும் நின்றது. ஜீலின் அதன் பக்கமாக ஊர்ந்து சென்றான்; பாதையில் அவ்வளவாக இருட்டாக இல்லாத இடத்தில் ஏதோ ஒன்று நின்றிருக்கக் கண்டான். அது கிட்டத்தட்ட ஒரு குதிரை மாதிரி காணப்பட்டது, ஆனால் குதிரை அல்ல; அதன் மீது ஏதோ ஒன்று வினோதமாக இருந்தது, ஆனால் அது மனிதனல்ல. அது பெரிதாக மூச்செறிந்ததை ஜீலின் செவிமடுத்தான். ‘அது என்னவாக இருக்கும்?’ ஜீலின் தாழ்குரலில் சீட்டியடித்தான்; உடனே அது தான் நின்று கொண்டிருந்த பாதையிலிருந்து தாவிப் புதர்களினூடே ஓடியது; அப்போது அந்தக் காட்டுப் பிரதேசம் முழுமையும் ‘படபட’வென்ற சப்தத்தால் நிரம்பி ஒரு சூறாவளிக் காற்று மரக் கிளைகளை முறித்துப் போட்டபடி காட்டினூடே சென்றது போல் இருந்தது.

கஸ்டீலின் மிகவும் பயந்தவனாகித் தரையோடு தரையாக ஒட்டிக் கொண்டான். ஆனால் ஜீலின் சிரித்த வண்ணம், “அது ஒரு கலைமான். அது தன் கொம்புகளினால் கிளைகளை முறித்ததை நீ கேட்கவில்லையா? நாம் அதைக் கண்டு பயந்தோம்; அது நம்மைக் கண்டு பயந்தது,” என்றான்.

அவர்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர். வானில் காணப்பட்ட ‘பெரிய கரடி’ எனப்படும் நட்சத்திரக் கூட்டம் (நாம் இந்தியாவில் இதை சப்தரிஷி மண்டலம் என்போம்!) ஏற்கெனவே மறைய ஆரம்பித்திருந்தது. பொழுது புலர ஆரம்பித்து விட்டது; ஆனால் அவர்களுக்குத் தாங்கள் சரியான பாதையில் தான் செல்கிறோமா எனத் தெரியவில்லை. இந்த வழியாகத் தான் தார்த்தாரியர்கள் தன்னைச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தனர், தாங்கள் ருஷ்யக் கோட்டையிலிருந்து இன்னும் ஏழு மைல் தொலைவில் இருக்கிறோம் என்று ஜீலின் எண்ணினான்; ஆனால் அவனுக்கு உறுதியாகத் தெரியவில்லை; மேலும் இரவின் இருட்டில் வழியை ஒருவன் தவறுதலாகப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு உண்டு. கொஞ்ச நேரத்தின் பின்பு அவர்கள் ஒரு வெட்டவெளியை அடைந்தனர். கஸ்டீலின் தரையில் அமர்ந்த வண்ணம் சொன்னான்,” நீ என்ன வேண்டுமோ செய்து கொள்! என்னால் இனி நகர முடியாது! என் பாதங்கள் என்னைச் சுமந்து கொண்டு செல்லாது!”

ஜீலின் அவனை சம்மதிக்க வைக்க முயன்றான்.

“இல்லை, நான் அங்கே போய்ச் சேரப் போவதில்லை; என்னால் முடியாது!” என்றான் கஸ்டீலின்.

ஜீலின் கோபம் கொண்டவனாகிக் கடூரமாக அவனிடம் பேசினான்.

“நல்லது, அப்படியானால் நான் தனியாகச் செல்கிறேன். போய் வருகிறேன்! (குட் பை!)” என்றான்.

கஸ்டீலின் துள்ளியெழுந்து அவனைத் தொடர்ந்தான். அவர்கள் இன்னும் ஒரு மூன்று மைல் தூரம் சென்றனர். காட்டினுள் மூடுபனி இன்னும் அடர்த்தியாகப் படிந்திருந்தது; அவர்களால் தங்கள் முன்பு ஒரு கஜ தூரம் கூடப் பார்க்க இயலவில்லை, நட்சத்திரங்களும் ஒளி மங்கி விட்டன.

திடீரென்று தங்கள் முன்பு அவர்கள் ஒரு குதிரையின் குளம்பொலியைக் கேட்டனர். அதன் லாடங்கள் கல்லின் மேல் படும் ஓசையைக் கேட்டனர். ஜீலின் தரையோடு தரையாகப் படுத்துக் காதால் தரை மூலம் அந்த ஓசையை உற்றுக் கேட்டான்.

“ஆம், அதே தான்! குதிரை மேல் ஒருவன் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறான்!”

அவர்கள் பாதையை விட்டு விலகி ஓடி, புதர்களின் கீழ் குனிந்து ஒளிந்து கொண்டு நிதானித்தனர். ஜீலின் சாலைப் பக்கம் தவழ்ந்து சென்று பார்த்தபோது ஒரு தார்த்தாரியன் பசு ஒன்றை ஓட்டியபடி, பாட்டு ஒன்றைத் தனக்குள் முணுமுணுத்தபடி செல்லக் கண்டான். தார்த்தாரியன் அவர்களைத் தாண்டிச் சென்றதும் ஜீலின் கஸ்டீலினிடம் திரும்பிச் சென்றான்.

“கடவுளே அவனை நம்மைத் தாண்டி அழைத்துச் சென்றிருக்கிறார்; எழுந்திரு, நாம் மேலே செல்லலாம்,” என்றான்.

கஸ்டீலின் எழ முயன்றான், ஆனால் திரும்ப விழுந்தான்.

“என்னால் முடியவில்லை; சத்தியமாக என்னால் முடியவில்லை! என்னிடம் சக்தியே இல்லை,” என்றான்.

அவன் கனத்த தடிமனான சரீரம் கொண்டவனாக இருந்ததால் வியர்வை பொங்கிப் பெருகியது. மூடுபனியின் குளிரில், பாதங்களிலிருந்து ரத்தமும் வடிந்ததால் அவன் மிகவும் துவண்டு போயிருந்தான்.

ஜீலின் அவனைத் தூக்கி எழுப்ப முயற்சித்ததும் அவன் திடீரெனச் சப்தமாகக் கூச்சலிட்டான், “ஓ….., எவ்வளவு வலிக்கிறது!”

ஜீலினின் உள்ளம் தளர்ந்தது.

“எதற்காக நீ கூச்சலிடுகிறாய்? அந்தத் தார்த்தாரியன் இன்னும் நமக்கு அருகிலேயே தான் இருக்கிறான்; நீ கூச்சலிட்டதைக் கூடக் கேட்டிருப்பான்!” என்றபடி ஜீலின் தனக்குள் எண்ணிக் கொண்டான், ‘இவன் நிஜமாகவே மிகவும் களைத்திருக்கிறான். நான் இவனை இப்போது என்ன செய்வது? ஒரு நண்பனைக் கைவிட்டு விட்டுச் செல்வது தகாது.’

“சரி, அப்படியானால் நீ எழுந்து என் முதுகில் ஏறிக் கொள். உன்னால் நிஜமாகவே நடக்க முடியாதென்றால் நான் உன்னைத் தூக்கிக் கொண்டு செல்கிறேன்,” என்றான்.

கஸ்டீலினை எழ உதவி செய்து, அவனது தொடைகளுக்கடியில் தனது கரங்களைக் கொடுத்து அவனைத் தூக்கியவாறு திரும்பவும் பாதையை அடைந்து நடக்கலானான் ஜீலின்.

“கடவுளின் அன்புக்காக மட்டுமாவது கேட்டுக் கொள்கிறேன், உன் கைகளால் என் கழுத்தை நெரிக்காதே! என் தோள்களைப் பிடித்துக் கொள்,” என்றான் ஜீலின்.

ஜீலின் தனது சுமை கனமானது என உணர்ந்தான்; அவனது பாதங்களிலிருந்தும் ரத்தம் கசிந்தது; அவனுமே மிகவும் களைப்புற்றிருந்தான். அவ்வப்பொழுது அவன் முன்னால் வளைந்து கஸ்டீலின் தன் தோள்மீது சரியாக மேற்புறமாக அமரும் வகையில் அவனைத் தூக்கிக் குலுக்கி விட்டபடிச் சென்றான்.

கஸ்டீலின் கத்தியதை அந்தத் தார்த்தாரியன் எப்படியாகிலும் கேட்டிருக்க வேண்டும். ஜீலின் தன் பின்னால் தார்த்தாரிய மொழியில் கத்தியவாறு நாலுகால் பாய்ச்சலில் யாரோ திடீரென்று வருவதைக் கேட்டான். அவன் உடனே புதர்களுக்குப் பின் பாய்ந்தோடினான். தார்த்தாரியன் தன் துப்பாக்கியை எடுத்துச் சுட்டான்; ஆனால் அது அவர்கள் மீது படவில்லை; அவன் தனது மொழியில் கூச்சலிட்டவாறு சாலையில் குதிரை மீது விரைந்து பாய்ந்து சென்றான்.

“நண்பா, நாம் இப்பொழுது தொலைந்தோம்,” என்றான் ஜீலின். “அந்த நாய் மற்ற தார்த்தாரியர்களைச் சேர்த்துக் கொண்டு வந்து நம்மை வேட்டையாடி விடும். உடனே இங்கிருந்து இன்னும் இரண்டு மைல்களாவது செல்லாவிடின் நாம் தொலைந்தோம்!” தனக்குள் இவ்வாறும் எண்ணிக் கொண்டான்: ‘எதற்காக நான்

இந்தச் சுமையை என்மீது ஏற்றிக் கொண்டேன்? நான் மட்டும் தனியாக இருந்திருந்தால் எப்போதோ தப்பிச் சென்றிருப்பேனே.'

"நீ தனியாகச் செல்," என்றான் கஸ்டீலின்; "என்னால் நீ எதற்காகச் சாக வேண்டும்?"

"நான் அவ்வாறு செல்ல மாட்டேன். ஒரு தோழனைக் கைவிடுவது என்பது இயலாத காரியம்."

திரும்பவும் கஸ்டீலினைத் தன் தோள்களின் மீது ஏற்றிக் கொண்டு தடுமாறியபடி நடந்தான். இவ்வாறு அவர்கள் ஒரு அரைமைல் தூரம் சென்றிருப்பார்கள். அவர்கள் இன்னும் காட்டின் உள்பகுதியில் தான் இருந்தனர்; அதன் எல்லையைக் காண முடியவில்லை. ஆனால் மூடுபனி விலக ஆரம்பித்து, மேகங்கள் சூழ ஆரம்பித்தன; நட்சத்திரங்களைக் காண முடியவில்லை. ஜீலின் மிகவும் களைத்திருந்தான். அவர்கள் சாலையின் பக்கம் கற்கள் பதித்த சுவர்கொண்ட ஒரு நீரூற்றை அடைந்தனர். ஜீலின் அங்கு நின்று கஸ்டீலினைத் தன் முதுகிலிருந்து இறக்கி விட்டான்.

"நான் சிறிது நீர் குடித்து விட்டுக் கொஞ்சம் இளைப்பாறுகிறேன்; கொஞ்சம் பாலாடைக் கட்டியையும் நாம் உண்ணுவோம். இனிமேல் நாம் செல்ல வேண்டியது வெகு தூரம் இல்லை," என்றான் ஜீலின்.

ஆனால் அவன் கீழே படுத்துச் சிறிது நீர் அருந்துவதற்குள்ளாகவே குதிரைகளின் காலடியோசையைத் தனது பின்பக்கமாகக் கேட்டான். திரும்பவும் அவர்கள் வலது பக்கத்திலுள்ள புதர்களுக்குள் பாய்ந்தோடி, ஒரு செங்குத்தான சரிவில் படுத்துக் கொண்டனர்.

அவர்கள் தார்த்தாரியர்களின் குரல்களைக் கேட்டனர். அவர்கள் எங்கே பாதையிலிருந்து திரும்பினார்களோ, அதே இடத்தில் தார்த்தாரியர்கள் வந்து நின்றனர். தமக்குள் சிறிது உரையாடிக் கொண்டு, தார்த்தாரியர்கள் ஒரு நாயை மோப்பம் பிடிக்க அனுப்பியது போலத் தோன்றியது. கிளைகளும் குச்சிகளும் உடையும் சப்தத்தைத் தொடர்ந்து புதர்களின் பின்னாலிருந்து ஒரு புதிய நாய் வந்து நின்று குரைக்க ஆரம்பித்தது.

பின்பு புதியவர்களான சில தார்த்தாரியர்கள் கீழிறங்கி வந்து ஜீலினையும் கஸ்டீலினையும் பிடித்துக் கட்டி அவர்களைக் குதிரைகளின் மேலேற்றிக் கொண்டு சென்றனர். அவர்கள் கிட்டத்தட்ட இரண்டு மைல் தூரம் பயணம் செய்த பின், இரு தார்த்தாரியர்கள் பின் தொடர வந்த அவர்களது பழைய எஜமானனான அப்துலைச் சந்தித்தனர். அவன் புதியவர்களிடம் பேசி விட்டு, ஜீலினையும் கஸ்டீலினையும்

தன்னுடைய குதிரைகள் மீது ஏற்றிக் கொண்டு தங்களது ஆவுலுக்குத் திரும்ப அழைத்துச் சென்றான்.

அப்துல் இப்போது சிரிக்கவும் இல்லை; அவர்களிடம் ஒரு வார்த்தையும் பேசவும் இல்லை.

பொழுது புலரும் வேளையில் ஆவுலை அடைந்ததும் சாலையில் அவர்கள் இறக்கி விடப் பட்டனர். சிறுவர்கள் கூட்டமாக வந்து, கூச்சலிட்டுக் கொண்டும், கற்களை அவர்கள் மீது விட்டெறிந்தும், சாட்டையினால் அவர்களை அடித்துக் கொண்டும் சூழ்ந்து கொண்டனர்.

தார்த்தாரியர்கள் அவர்களைச் சுற்றி ஒரு வட்டமாக நின்றனர்; மலை அடிவாரத்தில் வசித்த அந்த முதியவனும் அங்கே இருந்தான். அவர்கள் தங்களுக்குள் தர்க்கம் செய்ய ஆரம்பித்தனர்; தன்னையும் கஸ்டீலினையும் என்ன செய்வது என அவர்கள் யோசனை செய்கிறார்கள் என ஜீலின் அவர்கள் பேச்சிலிருந்து அறிந்து கொண்டான். மலைகளுக்குள் இன்னும் வெகு தூரம் அவர்களை அனுப்பி வைக்க வேண்டும் எனச் சிலர் கருதினார்கள்; ஆனால் அந்த முதியவனோ, “அவர்களைக் கொன்று விட வேண்டும்!” என்றான்.

அப்துல் அவனிடம் அதனை மறுத்து, “நான் இவர்களுக்காக விலை கொடுத்திருக்கிறேன்; ஆகவே நான் இவர்களுக்கான மீட்புத் தொகையைப் பெறவே வேண்டும்,” என்றான். ஆனால் அந்த முதியவன், “அவர்கள் உனக்கு ஒரு தொகையும் பெற்றுத் தர மாட்டார்கள், ஆனால் துரதிர்ஷ்டத்தைத் தான் கொண்டு வருவார்கள். ருஷ்யர்களுக்கு உணவளித்துக் காப்பது ஒரு பாவமான செயல். அவர்களைக் கொன்று தலைமுழுகி விடு!” என்றான்.

பின் எல்லாரும் கலைந்து சென்றார்கள். அவர்கள் சென்றானதும் எஜமானன் ஜீலினிடம் வந்து சொன்னான்: “உங்களுக்கான மீட்புத் தொகை இன்னும் பதினைந்து நாட்களுக்குள் வராவிட்டால் நான் உங்களைச் சாட்டையால் விளாசுவேன்; நீங்கள் திரும்பவும் தப்பி ஓட முயற்சி செய்தால் உங்களை நாயைக் கொல்வது போல் கொன்று விடுவேன்! ஒழுங்காக ஒரு கடிதத்தை எழுதுங்கள்!”

காகிதம் கொண்டு வரப்பட்டு அவரவர்கள் வீடுகளுக்குக் கடிதங்களை எழுதினார்கள். கால்களில் விலங்குகள் அணிவிக்கப்பட்டு, மசூதியின் பின்புறமிருந்த ஒரு ஆழமான பன்னிரண்டு சதுர அடிக் குழிக்குள் அவர்கள் இறக்கி விடப் பட்டார்கள்.

6

sakthi

இப்பொழுது அவர்களது வாழ்க்கை மிகவும் கடினமானதாகி விட்டது. அவர்களுடைய கால் விலங்குகள் ஒருபொழுதும் எடுக்கப் படவேயில்லை; அவர்கள் சிறு பொழுது கூட வெளியே காற்றாடச் செல்ல அனுமதிக்கப் படவில்லை. சுடப்படாத ரொட்டி மாவு நாய்களுக்கு வீசுவதைப் போல அவர்களுக்கு வீசியடிக்கப் பட்டது; ஒரு குவளையில் நீர் அந்தக் குழிக்குள் இறக்கப் பட்டது.

ஈரமாகவும், அடைசலாகவும் இருந்த அந்தக் குழி, துர்நாற்றம் வீசிக் கொண்டு இருந்தது. கஸ்டீலின் மிகவும் நோய்வாய்ப்பட்டான்; அவன் உடல் பூராவும் வீங்கி மிகவும் வலித்தது; அவன் புலம்பியவாறே எல்லாப் பொழுதையும் உறங்கிய வண்ணம் கழித்தான். ஜீலினும் உற்சாகமிழந்து இருந்தான்; நேரமும் இடமும் சரியாக இல்லை எனக் கண்டு கொண்ட அவனால் தப்பிச் செல்ல ஒரு வழியையும் பற்றி எண்ணவும் முடியவில்லை.

அவன் ஒரு சுரங்கப்பாதை அமைக்கப் பார்த்தான்; ஆனால் தோண்டிய மண்ணைப் போட இடமே இல்லை. எஜமானன் அதைப் பார்த்து விட்டு, அவனைக் கொன்று விடுவேன் என்று பயமுறுத்தினான்.

ஒருநாள் அவன் அந்தக் குழியின் தரையில் அமர்ந்து கொண்டு, விடுதலை பற்றி யோசித்த வண்ணம் மிகவும் மனந்தளர்ந்து இருந்தான்; அப்போது திடீரென்று அவன் மடியில் ஒரு கேக் விழுந்தது, பின் இன்னுமொன்று, பின் ஏராளமான செர்ரிப் பழங்கள் என விழுந்தன. அவன் மேலே அண்ணாந்து பார்த்த போது அங்கு டீனாவைக் கண்டான். அவள் அவனைப் பார்த்துச் சிரித்து விட்டு ஓடி விட்டாள். உடனே ஜீலின் சிந்திக்கலானான், 'டீனாவால் எனக்கு உதவ முடியாதா?'

அவன் அந்தக் குழியில் ஒரு இடத்தைச் சுத்தம் செய்தான்; கொஞ்சம் களிமண்ணைத் தோண்டி எடுத்து, அதனால் பொம்மைகள் செய்ய முற்பட்டான். மனிதர்கள், குதிரைகள், நாய்கள் ஆகியவற்றைச் செய்து வைத்து, 'டீனா வரும்போது இவற்றை அவளிடம் மேல் நோக்கி எறிவேன்,' என எண்ணிக் கொண்டான்.

ஆனால் அடுத்த நாள் டீனா வரவில்லை. ஜீலின் குதிரைகளின் காலடிச் சப்தத்தைக் கேட்டான்; குதிரைகளில் சவாரி செய்து சென்ற சில மனிதர்களும் தார்த்தாரியர்களும் மசூதியினருகே ஒரு கூட்டமாகக் கூடினர். அவர்கள் கூச்சலிட்டபடி விவாதித்தனர்; 'ருஷ்யன்' என்ற வார்த்தை அடிக்கடி அவர்கள் பேச்சில் அடிபட்டது. அந்த முதியவனின் குரலையும் அவனால் கேட்க முடிந்தது. அவனால் அவர்கள் பேச்சை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், ருஷ்யத் துருப்புகள் எங்கோ சமீபத்தில் இருப்பதை ஊகித்து அறிந்து கொண்டான்; தார்த்தாரியர்கள் அத்துருப்புகள் ஆவுலுக்குள் நுழைந்து விட்டால், தங்கள் கைதிகளை என்ன செய்வதென்று யோசித்ததையும் உணர்ந்து கொண்டான்.

சிறிது நேரம் பேசி விட்டு, அவர்கள் கலைந்து சென்றனர். திடீரென மேற்புறம் ஒரு சலசலப்புச் சப்தம் கேட்கவே, ஜீலின் அண்ணாந்து பார்த்தபோது, டீனா குழியின் ஓரத்தில் முழங்கால்களுக்கிடையே தலையை அவ்வளவு குனிந்து கொண்டு பார்ப்பதைக் கண்டான்; அவளுடைய தலைப்பின்னலில் இருந்த காசுகள் குழியின் மேற்புறமாகத் தொங்கி ஊஞ்சலாடின. அவளுடைய கண்கள் நட்சத்திரங்களைப்

போல் மின்னின. இரண்டு பாலாடைக் கட்டிகளைத் தன் சட்டையின் கைமடிப்பிலிருந்து எடுத்து அவள் அவனிடம் வீசியெறிந்தாள். ஜீலின் அவற்றை எடுத்துக் கொண்டபடி அவளிடம், “நீ ஏன் நேற்று வரவில்லை? நான் உனக்காகச் சில பொம்மைகள் செய்து வைத்திருக்கிறேன். இதோ, பிடி!” என்றான். அவற்றை ஒவ்வொன்றாக மேலே வீசியெறிந்தான்.

ஆனால் அவள் தன் தலையை அசைத்தபடி, அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

“எனக்கு அவை ஒன்றும் வேண்டாம்,” என்றாள். சிறிது நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்து விட்டுப் பின், “இவான், அவர்கள் உன்னைக் கொல்லப் போகிறார்கள்!” என்றபடி, தனது கழுத்தில் கையை வைத்து அதை அறுப்பதைப் போல ஜாடை காட்டினாள்.
“யார் என்னை கொல்ல விரும்புகிறார்கள்?”

“என் தந்தை தான்; அந்த முதியவர்கள் அவன் அவ்வாறு செய்ய வேண்டும் என்கிறார்கள். ஆனால் நான் உனக்காக வருத்தப் படுகிறேன்!”

ஜீலின் கூறினான்: “சரி, நீ எனக்காக வருத்தப் பட்டால், ஒரு நீண்ட கழியைக் கொண்டு வா,” என்றான்.

அவள் தலையை அசைத்தபடி, “என்னால் முடியாது!” என்றாள்.

அவன் தன் இரு கரங்களையும் இறுகக் கூப்பிக் கொண்டு அவளிடம் வேண்டினான்: “டீனா, தயவு செய்து இதைச் செய்யம்மா! அன்பான டீனா, நான் உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்!”

“என்னால் முடியாது,” என்றவள், “நான் கழியைக் கொண்டு வந்தால் அவர்கள் எல்லாரும் அதைப் பார்த்து விடுவார்கள். எல்லாரும் வீட்டில் தான் இருக்கிறார்கள்,” என்று கூறி விட்டுச் சென்று விட்டாள்.

மாலைப் பொழுதானபோது ஜீலின் இன்னும் குழியின் தரையில் அமர்ந்தபடியும் அடிக்கடி அண்ணாந்து மேலே பார்த்தபடியும் என்ன நடக்கப் போகிறதோ என யோசித்தபடி இருந்தான். ஆகாயத்தில் நட்சத்திரங்கள் இருந்தன, ஆனால் நிலவு இன்னும் எழும்பவில்லை. முல்லாவின் பிரார்த்தனைக் குரல் கேட்டது; பின் எல்லாம் அமைதியாகி விட்டது. “அந்தச் சிறுமி இதைச் செய்ய பயப்படுவாள்,” என எண்ணியவாறு அவன் கண்ணயர ஆரம்பித்தான்.

திடீரென அவன் தன் தலைமீது மண் விழுவதை உணர்ந்தான். அவன் உயர நோக்கிய போது ஒரு நீண்ட கழி குழியின் எதிர்ச் சுவரில் குத்திய வண்ணம் இருப்பதைக் கண்டான். சிறிது நேரம் அவ்வாறு குத்திய வண்ணம் இருந்து விட்டு அது நழுவிக் குழிக்குள் இறங்கியது. ஜீலின் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அதைப் பிடித்த வண்ணம் குழிக்குள் இறக்கினான். அது ஒரு நல்ல உறுதியான கழி; தன் எஜமானனின் குடிசையின் கூரை மீது அதை அவன் முன்பு பார்த்திருக்கிறான்.

அவன் அண்ணாந்து பார்த்தான். உயரே வானில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன: குழியின் மேலே டீனாவின் கண்கள் இருளில் பூனையின் கண்களைப் போல் பிரகாசித்தன. அவள் குழியின் விளிம்பு வரை உடலை வளைத்து ரகசியமான குரலில், “இவான்! இவான்!” என்றபடி தன் முகத்துக்கு முன்பு கையை ஆட்டி, அவன் தாழ்ந்த குரலில் பேச வேண்டும் என்பதைத் தெரிவித்தாள்.

“என்ன?” என்றான் ஜீலின்.

“இருவரைத் தவிர எல்லாரும் எங்கோ சென்று விட்டார்கள்.”

அப்போது ஜீலின், “கஸ்டீலின், வா; நாம் கடைசியாக ஒருமுறை முயல்வோம்; நான் உனக்கு எழுந்திருக்க உதவுகிறேன்,” என்றான்.

ஆனால் கஸ்டீலின் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

“முடியாது,” என்றவன், ” நான் இங்கிருந்து வெளியேற முடியாது என்பது சர்வ நிச்சயம். எனக்குத் திரும்பிப் பார்க்கக் கூட சக்தி இல்லாத போது நான் எப்படி எங்கு செல்ல முடியும்?” என்றான்.

“நல்லது. அப்போது நான் சென்று வருகிறேன். குட் பை! என்னைப் பற்றித் தப்பாக எண்ணாதே!” இருவரும் நட்பின் அடையாளமாகக் கன்னத்தில் முத்தமிட்டுக் கொண்டனர் (இது அந்நாட்டு வழக்கம்). ஜீலின் கழியை இறுகப் பற்றிக் கொண்டான்; டீனாவிடம் அதை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் சொல்லி விட்டு, அதில் தாவி ஏற ஆரம்பித்தான். ஓரிரு முறைகள் வழுக்கினான்; கால்விலங்குகள் அவனைத் தடுத்தன. பின் கஸ்டீலினின் உதவியுடன் ஒருவாறு உச்சியை அடைந்தான். டீனாவும் சிரித்தவாறே தனது சிறிய கைகளால் அவனது சட்டையைப் பற்றி இழுத்து உதவினாள்.

ஜீலின் கழியை வெளியே எடுத்து அவளிடம் கொடுத்து, “முதலில் இதை அதன் இடத்தில் திருப்பி வைத்து விடு; இல்லாவிட்டால் இதைக்கண்டு பிடித்து விட்டு அவர்கள் உன்னைப் போட்டு அடிக்கப் போகிறார்கள்,” என்றான்.

அவள் அந்தக் கழியை இழுத்துக் கொண்டு சென்றாள்; ஜீலின் குன்றிலிருந்து இறங்கிச் செல்ல ஆரம்பித்தான். அவன் செங்குத்தான சரிவிலிருந்து இறங்கியதும் ஒரு கூரான கல்லை எடுத்துக் கால் விலங்கிலிருந்த பூட்டைத் திருகி இழுத்து உடைக்கப் பார்த்தான். ஆனால் அது கெட்டியான பூட்டாக இருந்ததால் அவனால் அதை உடைக்க முடியவில்லை; மேலும் அதைக் குனிந்து பிடித்து உடைப்பதும் கடினமாக இருந்தது. யாரோ குன்றிலிருந்து குதித்து ஓடி சுலபமாக இறங்கி வரும் ஓசை கேட்டது. 'நிச்சயமாக அது திரும்பவும் டினா தான்,' என அவன் எண்ணிக் கொண்டான்.

டினா ஓடி வந்து ஒரு கல்லை எடுத்து கொண்டு, "நான் முயற்சி செய்கிறேன்," என்றாள்.

முழந்தாளிட்டு அமர்ந்தபடி, பூட்டைத் திருகி உடைக்க அவள் முயன்றாள்; அவளுடைய சின்னஞ் சிறிய கைகள் சிறு மரக்கிளைகளைப் போல மெல்லியதாக பலமில்லாமல் இருந்தன; அவளுக்கும் போதிய சக்தி இருக்கவில்லை. அவள் கல்லை விட்டெறிந்து விட்டு விம்மி அழ ஆரம்பித்தாள். பிறகு ஜீலின் திரும்பவும் பூட்டை உடைக்க முயற்சி செய்தான்; டினாவும் அவன் தோளின் மீது கைகளை வைத்தபடி அவன் பக்கம் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டாள்.

ஜீலின் சுற்றுமுற்றும் பார்த்தபோது, ஒரு சிவப்பு நிற வெளிச்சம் குன்றின் இடதுபுறம் படருவதைக் கண்டான். நிலா அப்பொழுது தான் உதயமாகிக் கொண்டிருந்தது. 'ஆ, நிலா எழுவதற்கு முன்பே நான் பள்ளத்தாக்கைக் கடந்து காட்டினுள் சென்றிருக்க வேண்டும்,' என எண்ணிக் கொண்டான். ஆகவே எழுந்து கல்லைத் தூக்கி எறிந்தான். இனி விலங்குகளுடன் தான் அவன் செல்ல வேண்டும்.

"அன்புள்ள டினா, குட் பை! உன்னை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்!," என்றான்.

டினா அவனைப் பிடித்திழுத்து, தான் கொண்டு வந்திருந்த சில பாலாடைக் கட்டிகளை வைக்க ஓர் இடத்தைத் தன் கைகளால் துழாவினாள். அவன் அவற்றை அவளிடமிருந்து பெற்றுக் கொண்டான்.

"நன்றி என் சின்னக் குட்டி! நான் போய்விட்ட பின்பு உனக்கு யார் பொம்மைகள் செய்து தருவார்கள்?" எனக் கேட்ட வண்ணம் அவள் தலையைத் தடவி விட்டான் ஜீலின்.

டினா தன் சிறு கைகளால் முகத்தை மூடியபடி திடீரென விம்மி அழ ஆரம்பித்தாள். பின்பு அவள் பின்னலில் இருந்த நாணயங்கள் பின்புறத்தில் பட்டுக் கலகலவென ஒலி எழுப்பக் குன்றின் மேல் ஒரு சிறு ஆட்டுக்குட்டியைப் போல் ஏறி ஓடினாள்.

ஜீலின் தன் மார்பில் சிலுவைக் குறியிட்டுக் கொண்டு, கால்விலங்குகளின் பூட்டை, அது ஓசைப் படுத்தாமலிருக்கத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு, விலங்கிடப்பட்ட காலை இழுத்தபடி, நிலா உதயமாகிக் கொண்டிருந்த இடத்தைப் பார்த்த வண்ணம் பாதையில் செல்லலானான். இப்போது அவனுக்கு வழி தெரிந்திருந்தது. அவன் நேராகச் சென்றால், கிட்டத்தட்ட ஆறு மைல்கள் நடக்க வேண்டி வரும். நிலா எழும் முன்பே அவன் காட்டை அடைய முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அவன் ஆற்றைக் கடந்தான்; குன்றின் பின்னால் இருந்த ஒளி பிரகாசமாகிக் கொண்டே வந்தது; அதைப் பார்த்தபடியே அவன் பள்ளத்தாக்கின் வழியாகச் சென்றான். நிலாவை இன்னும் பார்க்க முடியவில்லை. வெளிச்சம் மட்டும் அதிகமாகிக் கொண்டே இருந்தது; பள்ளத்தாக்கின் ஒரு பகுதி வெளிச்சமாகிக் கொண்டே வந்தது; நிழல்கள் குன்றின் அடிவாரத்தை நோக்கி நகர்ந்து அவன் பக்கமாக மெல்ல மெல்ல நெருங்கிக் கொண்டிருந்தன.

ஜீலின் நிழலின் மறைவிலேயே இருந்தபடி சென்று கொண்டிருந்தான். அவன் வேகமாகச் செல்லச் செல்ல நிலாவும் அதைவிட விரைவாக நகர்ந்தது; வலது பக்கம் இருந்த குன்றுகளின் உச்சிகள் பளிச்சென்று தெரிந்தன. அவன் காட்டை நெருங்கியதும், குன்றின் பின்னாலிருந்து முழு வெள்ளி நிலா எழுந்து அந்தப் பிரதேசத்தையே பகல் போல வெளிச்சமாக்கியது. மரங்களில் இருந்த இலைகளை எல்லாம் பார்க்க முடிந்தது. குன்றுகள் பிரகாசமாக இருந்தாலும், எங்கும் உயிரே இல்லாதது போல, மிகவும் நிசப்தமாக இருந்தது; கீழ்ப்புறமாகக் ‘கள கள’வென ஓசை எழுப்பியபடி ஓடிய ஆற்றின் ஓசையைத் தவிர வேறு ஒலிகளே இல்லை.

ஒருவரையும் எதிர்ப்படாமல் ஜீலின் காட்டை அடைந்தான்; ஒரு இருட்டான இடத்தைத் தேடிப் பிடித்து இளைப்பாற அமர்ந்தான்.

இளைப்பாறிய வண்ணம் ஒரு பாலாடைக் கட்டியைத் தின்றான். பிறகு ஒரு கல்லைத் தேடி எடுத்துத் திரும்பவும் கால் விலங்குகளை உடைக்க முயன்றான். கைகளைக் காயப் படுத்திக் கொண்டானேயன்றிப் பூட்டை உடைக்கவே முடியவில்லை. எழுந்து திரும்பவும் அந்தச் சாலையில் சென்றான். ஒரு மைல் தூரம் போல நடந்ததும் அவனுக்குக் கால்கள் மிகவும் வலிக்கத் தொடங்கிப் போதும் போதும் என்றாகி விட்டது. பத்து அடிகளுக்கு ஒருமுறை ஆசுவாசப் படுத்திக் கொள்ள வேண்டி வந்தது. ‘இதைத் தவிர வேறு வழியே இல்லை,’ என எண்ணிக் கொண்டான். ‘என் உடலில் சக்தி எஞ்சி இருக்கும் வரை நான் சென்று கொண்டே இருக்க வேண்டும். நான் உட்கார்ந்து விட்டால் பின்பு என்னால் எழுந்திருக்கவே முடியாமல் போய் விடும். பிறகு நான் கோட்டையை அடைய முடியாது; ஆனால் பொழுது விடிந்ததும் நான் காட்டில் படுத்து உறங்கி, அங்கே பகல் பொழுதைக் கழிப்பேன்; திரும்பவும் இரவில் என் வழியில் செல்வேன்.’

இரவு முழுதும் அவன் இவ்வாறு நடந்தான். இரு தார்த்தாரியர்கள் குதிரைகளின் மீது அவனைக் கடந்து சென்றனர்; அவன் ஒரு மரத்தின் பின் ஒளிந்தவாறு அவர்கள் செல்லும் ஒலியை வெகு தூரம் வரை கேட்டான்.

நிலா ஒளி மங்க ஆரம்பித்துப் பனித்துளிகள் விழத் தொடங்கின. விடியும் வேளை நெருங்கியது; ஆனால் ஜீலின் இன்னும் காட்டின் எல்லையை அடைந்திருக்கவில்லை. ‘சரி, நான் இன்னும் முப்பது அடிகள் நடந்து மரங்களுக்கிடையே சென்று உட்காருவேன்,’ என நினைத்துக் கொண்டான்.

இன்னும் முப்பது அடிகள் நடந்ததும் தான் காட்டின் எல்லையில் இருக்கக் கண்டான். அதன் விளிம்பிற்குச் சென்றான்; இப்போது விடிந்து வெளிச்சமாக இருந்தது; அவனுக்கு எதிரில் நேராகச் சமவெளியும் கோட்டையும் தென்பட்டன. இடது பக்கமாக, அடிவாரச் சரிவின் அருகில், அணைந்து கொண்டிருந்த நெருப்பின் புகை பரவிக் கொண்டிருந்தது. அதைச் சுற்றிச் சில மனிதர்கள் அமர்ந்திருந்தார்கள்.

அவன் கூர்ந்து நோக்கிய போது துப்பாக்கிகள் பளபளப்பதைக் கண்டான். அவர்கள் ராணுவ வீரர்கள்- ‘கஸ்ஸாக்கு’கள் (Cossacks) எனப்படும் ருஷ்யக் குதிரைப் படை வீரர்கள்!

ஜீலின் மனதில் மகிழ்ச்சி நிறைந்தது. தனது உடலில் எஞ்சியிருந்த சக்தியை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு குன்றிலிருந்து கீழிறங்கிய வண்ணம், ‘குதிரை மேலுள்ள ஒரு தார்த்தாரியனும் இப்போது இந்தத் திறந்த வெளியில் என்னைக் காணாதபடிக்குக் கடவுளே காக்க வேண்டும். ஏனெனில், நான் பக்கத்தில் இருந்தாலும் கூட, சரியான சமயத்தில் அங்கு போய்ச் சேர முடியாது,’ எனத் தனக்குள் கூறிக் கொண்டான்.

இவ்வாறு சொல்லி வாய்மூடவில்லை; இருநூறு கஜ தூரத்தில் , இடதுபுறமிருந்த ஒரு சிறுகுன்றின் மேல் மூன்று தார்த்தாரியர்களைக் கண்டான்.

அவர்களும் அவனைக் கண்டதால், விரைந்து வந்தனர். ஜீலினின் மனம் தளர்ந்தது. அவன் கைகளை வீசிக் கொண்டு சக்தியை எல்லாம் திரட்டிக் கூவினான், “சகோதரர்களே, சகோதரர்களே! உதவுங்கள்!”

படை வீரர்களுக்கு அவன் கூவியது கேட்டதால், அவர்களில் கொஞ்சம் பேர் குதிரைகளின் மீதேறிப் பாய்ந்து தார்த்தாரியர்களின் பாதையின் குறுக்கே சென்றனர். படைவீரர்கள் தூரத்திலும், தார்த்தாரியர்கள் அருகிலும் இருந்தனர்; ஆனால் ஜீலினும் கடைசியாக ஒரு பெரு முயற்சி செய்தான். கால்விலங்குகளைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு, தான் என்ன செய்கிறேன் என்றே உணராமல்,

மார்பில் சிலுவைக்குறியை இட்டுக் கொண்டு, “சகோதரர்களே! சகோதரர்களே! சகோதரர்களே!” என்று கூவியவாறு அவன் படைவீரர்களை நோக்கி ஓடலானான்.

அங்கு பதினைந்து படைவீரர்கள் இருந்தனர். அதனால் தார்த்தாரியர்கள் அச்சம் கொண்டு, அவனை நெருங்குவதற்கு முன்பே நின்று விட்டனர். ஜீலின் தடுமாறிய வண்ணம் படைவீரர்களை நோக்கிச் சென்றான்.

அவர்கள் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டு கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர், “நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?”

ஆனால் ஜீலின் ஒன்றுமே செய்ய இயலாதவனாகி அழுத வண்ணம், “சகோதரர்களே! சகோதரர்களே!” என மட்டும் பிதற்றிக் கொண்டிருந்தான்.

அந்தப் படைவீரர்கள் ஓடிவந்து அவனைச்சூழ்ந்து கொண்டு, ஒருவன் ரொட்டியைக் கொடுக்கவும், இன்னொருவன் கொஞ்சம் தானியத்தைக் கொடுக்கவும், மூன்றாமவன் வோட்காவை (ருஷ்யச் சாராயம்)க் கொடுக்கவும், ஒருவன் அவன் மீது ஒரு அங்கியைப் போர்த்தினான்; இன்னொருவன் அவன் கால் தளைகளை உடைத்தான்.

அவர்களில் இருந்த அதிகாரிகள் அவனை அடையாளம் கண்டு கொண்டனர்; அவனைத் தங்களுடன் கோட்டைக்கு அழைத்துச் சென்றனர். மற்ற படைவீரர்கள் அவனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்; அவனது எல்லா நண்பர்களும் அவனைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டனர்.

ஜீலின் தனக்கு நேர்ந்ததையெல்லாம் அவர்களுக்குக் கூறினான்.

“நான் வீடு சென்று திருமணம் செய்து கொண்ட கதை இது தான்! விதியே அதற்கு எதிராக இருந்தது என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது!” என்றான்.

ஆகவே அவன் காகசஸ் மலைப் பகுதியில் ராணுவத்தில் தொடர்ந்து பணி புரிந்தான். கஸ்டீலின், மேலும் ஒரு மாதம் கழித்து ஐயாயிரம் ரூபிள்கள் மீட்புத் தொகை கொடுத்தபின் விடுதலை செய்யப்பட்டான். அவர்கள் அவனைத் திரும்பக் கொண்டு வந்த போது அவன் உயிர் ஏறக்குறையப் போய் விட்டிருந்தது.

(முடிந்தது)
sakthi